விலை: 30.00
website : www.valampurii.lk
viber : 076 636 3378
பக்கங்கள் : 16

# வலம்புரி

# Valampurii

E-mail: valampurii@yahoo.com


கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே

சங்கு 23
ஒலி 076 வள்ளுவர் ஆண்டு 2053 மாசி 21 சனிக்கிழமை (05.03.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829



அரசை விமர்சிப்பவர்கள்

## வெளியேறுங்கள் இல்லாவிட்டால் வெளியேற்றுவேன்

- கோட்டாபய

3ஆம் பக்கம் பார்க்க

## சர்வாதிகார அரசை வீழ்த்த வேண்டும்

பொன்சேகா



5ஆம் பக்கம் பார்க்க

## பதவியிலிருந்து விமல், கம்மன்பில நீக்கப்பட்டமை மிகப்பெரும் அநீதி

### வாசுதேவ கடும் சீற்றம்



(கொழும்பு)

**அமைச்சர்களான விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோர் அமைச்சரவையில் இருந்து நீக்கப்பட்டமை பெரும் அநீதியாகும் என நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.**

அத்துடன், தான் வகிக்கும் அமைச்சுப் பதவி தொடர்பில் கட்சியின் செயற்குழு தீர்மானமொன்றை எடுக்கும் எனவும் அவர் கூறினார்.

விமல் வீரவன்ஸ மற்றும் உதய கம்மன்பில ஆகியோர் பதவி நீக்கம் செய்யப்பட்டதையடுத்து அமைச்சரவையில் அமைச்சராக கடமையாற்ற முடியாது என அமைச்சர் 02

பங்காளிக் கட்சியினர் அதிருப்தி

# ராஜபக்ஷ அரசு கவிழும் அபாயம்

(கொழும்பு)

**விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோர் அமைச்சுப் பதவியிலிருந்து நீக்கப்பட்டதையடுத்து அரச பங்காளிக் கட்சியினர் கடும் அதிருப்தி அடைந்துள்ளனர்.**

இதனால் ராஜபக்ஷ அரசாங்கம் கவிழும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

(15ஆம் பக்கம் பார்க்க)



பொன்னாலையில்

## இரத்தக்கறையுடன் ஆணின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

பொன்னாலையில் இரத்தக்கறையுடன் வீதியோரம் சடலம் ஒன்று நேற்று அதிகாலை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

பொன்னாலை பருத்தித்துறை வீதியில் பொன்னாலைக்கும் திருவடிநிலைப் பகுதிக்கும் இடைப்பட்ட பகுதியிலேயே இனங்காண 15

## மனச்சாட்சியே முக்கியம்

### அடுத்த கட்டம் தொடர்பில் இன்று முடிவு : கம்மன்பில

(கொழும்பு)

அமைச்சுப் பதவி பறிக்கப்பட்டதனால் நான் கவலை அடையவில்லை, எனக்கு அமைச்சுப் பதவியைவிட, மனச்சாட்சியே முக்கியம். அதற்கு எதிராகச் செயற்பட முடியாது என ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணியின் பங்காளிக் கட்சியான புதிய ஹெல 15

## சனி, ஞாயிறு மின்வெட்டு அமுலாகும்

(கொழும்பு)

இன்று சனிக்கிழமை எட்டு வலயங்களில் 3 மணி நேரமும் (காலை 8.30 மணி முதல் மாலை 5.30 மணி வரையிலும்) 15

## விமல் வீரவன்ஸ, கம்மன்பிலவை எம்முடன் சேர்க்கமாட்டோம்

### சஜித் அணி கதவடைப்பு

(கொழும்பு)

அமைச்சரவையிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர்களான விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோருடன் நாம் ஒருபோதும் கூட்டணி அமைக்கமாட்டோம். தேர்தலுக்கு முன்னும் சரி, பின்னும் சரி இத்தகைய இனவாதிகளை எம்முடன் சேர்க்க மாட்டோம் என எதிர்க்கட்சி தலைவர், ஐக்கிய 15

## மாணவர்களை குழுவாக பிரித்து வகுப்புகள் நடத்த நடவடிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் திங்கட்கிழமை பாடசாலைகள் மீள ஆரம்பிக்கும்போது மாணவர்களின் எண்ணிக் 02

## புகையிரதம் மோதியதில்

### யாழில் இளைஞன் ஒருவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோவில் வீதியில் கொழும்பு நோக்கிப் பயணித்த குளிரூட்டப்பட்ட கடுகதி ரயில் மோதி இளைஞன் ஒருவர் 15

### முல்லையில் யுவதி மரணம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாங்குளம் பகுதியில் புகையிரதத்தில் மோதுண்டு யுவதி ஒருவர் உயிரிழந்துள்ளார். 15

## மின்சாரம், எரிபொருள் கட்டணத்தை உயர்த்துக

### அரசுக்கு மத்திய வங்கி பரிந்துரை

(கொழும்பு)

உடன் அமுலாகும் வகையில் எரிபொருள் விலைகள் மற்றும் மின்சார கட்டணங்களை அதிகரிக்குமாறு இலங்கை மத்திய வங்கியின் நிதிச்சபை அரசாங்கத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

நாடு எதிர்கொண்டுள்ள சவாலான பொருளாதார சூழ்நிலைகளை சமாளிக்க ஒருங்கிணைந்த அணுகு 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## பதவியிலி...

வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் சரியான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வரை தனது கடமைகளில் இருந்து விலகுவதாகவும் அமைச்சரவைக் கூட்டங்களில் கலந்து கொள்வதைத் தவிர்த்துக் கொள்வதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

நான் அமைச்சுப் பதவியில் இருந்து இராஜினாமா செய்ய மாட்டேன், ஆனால் அமைச்சரவைக் கூட்டத்திற்குச் செல்லமாட்டேன், எந்த அமைச்சுப் பொறுப்புகளையும் நிறைவேற்ற மாட்டேன் என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார். (ம)

# அரசு அரங்கேற்றும் நாடகத்தை மக்கள் இனியும் நம்பக்கூடாது

## ஜே.வி.பி தலைவர் அநுரகுமார

(கொழும்பு)

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கான வாய்ப்பை வழங்கிவிட்டு, அதனை வைத்து உள்நாட்டு அரசியல் நடத்துவதற்கும் அனுதாப அலையைத் திரட்டுவதற்கும் அரசு அரங்கேற்றும் நாடகத்தை நாட்டு மக்கள் நம்பக்கூடாது என ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது,

"நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைக்கு ஆரம்பத்தில் கோவிட் தொற்றை காரணம் காட்டினர். தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் பற்றாக்குறை உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு ரஷ்யா, உக்ரைன் மோதலைக் காரணம் காட்ட முற்படுகின்றனர்.

அடுத்ததாக ஜெனிவா விவகாரத்தையும் பயன்படுத்துவார்கள். அதாவது தேசப்பற்றுள்ள அரசே நாட்டை ஆள்கின்றது. இது மேற்குலகத்துக்கு சகித்துக்கொள்ள முடியவில்லை, அதனால் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த சூழ்ச்சி செய்யப்படுகின்றது எனவும் பரப்புரை முன்னெடுப்பார்கள்.

இந்தச் சூழ்ச்சிக்காரர்களின் பிடிக்குள் பேராயர் சிக்கிவிட்டார் எனவும் முழக்கம் எழுப்புவார்கள். உயிர்த்த ஞாயிறு தினத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் இன்னும் நீதி நிலைநாட்டப்படவில்லை.

தகவல்கள் கிடைத்தும் தாக்குதலை தடுத்து நிறுத்தத் தவறியோர் மற்றும் தாக்குதலை திட்டமிட்ட சூத்திரதாரிகளுக்கு எதிராக நடவடிக்கையும் இல்லை.

எனவே, நீதிக்காகப் போராடுவதற்கான உரிமை பேராயருக்கு இருக்கின்றது. உள்நாட்டில் உரிய நடவடிக்கை எடுக்கப்படாததால்தான் அவருக்கு சர்வதேசத்தை நாட வேண்டி வந்தது. இதற்கான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுத்ததற்கான பொறுப்பை அரசு தான் ஏற்க வேண்டும்.

ஜெனிவாவில் அழுத்தங்கள் வந்தால் அதற்கான பொறுப்பையும் அரசு ஏற்க வேண்டும். ஜெனிவாவில் தீர்மானம் நிறைவேற இடமளித்துவிட்டு, அதனை வைத்து உள்நாட்டில் அரசியல் நடத்தும் நாடகம் 10 ஆண்டுகளாக தொடர்கின்றது. இனியும் மக்கள் ஏமாறக்கூடாது என்றார். (ம)

# மரண அறிவித்தல்



## கார்த்திகேசு செல்வரத்தினம்

தோற்றம் : 1930.03.01 மறைவு : 2022.02.28

ஊரெழுவைப் பிறப்பிடமாகவும் சிறுப்பிட்டி, கொழும்பு, கனடா ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட கார்த்திகேசு செல்வரத்தினம் அவர்கள் கடந்த 28.02.2022 (திங்கட்கிழமை) அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லையா - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் ஜெயலக்ஷ்மியின் அன்புக் கணவரும் சுபாங்கி (கனடா), சுதர்ஷன் (லண்டன்), சுரேந்திரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் தயாபரன், உமா, சங்கரி ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம், மாசிலாமணி, பவளமணி, அருளம்பலம், அரசரத்தினம் மற்றும் சரஸ்வதி, திலகவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான யோகம்மா, தில்லைநாதன், காசிப்பிள்ளை மற்றும் ஞானபூபதி, சிவக்கொழுந்து, காலஞ்சென்ற தனபாலன், இரத்தினசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் சுபனியா, சாருஜன், கிரண், கைல், நேத்ரா, ஹனிஷ், ஹரி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (06.03.2022) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் இடம்பெறும்.

Viewing : Saturday March 5th, 6.00 pm - 9.00 pm
Service : Sunday March 6th, 8.30 am - 10.00 am
Cremation and Witnessing : Sunday March 6th, 10.30 am
Highland Hills Crematorium 12492 Woodbine Avenue, Gromly, ON

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(10485)

சிறுப்பிட்டி கிழக்கு,
நீர்வேலி.

சுரேன் : +1(416) 565 - 1216

தகவல் :-
குடும்பத்தினர்

## மாணவர்களை...

கைக்கு ஏற்ப குழுக்களாக வகுப்புக்களை நடத்த கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

பாடசாலைகள் மீள ஆரம்பித்தல் தொடர்பான சுற்றுநிருபமானது கல்வி அமைச்சின் செயலாளர் கே.கபில, சி.கே.பெரேரா அவர்களினால் வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைவாக 20 மாணவர்களை கொண்ட வகுப்பில் எல்லா நாட்களும் சகல வகுப்புக்களினை நடாத்தவும் 21 - 40 இற்கு உள்ளிட்ட மாணவர்கள் உள்ள வகுப்பறையினை இரு குழுக்களாக பிரித்து வாரம் விட்டு வாரம் நடத்தவும் 40 இற்கு மேல் எண்ணிக்கையுடைய மாணவர்கள் வகுப்பறையை எண்ணிக்கைக்கு ஏற்ப சமாமன மூன்று குழுக்களாக பிரிந்தும் கற்றல் நடவடிக்கைகள் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ம)

# கண்ணீர் அஞ்சலி



எமது அன்புக்குரிய நண்பர்களான **றெமிசியஸ் லோயலா** மற்றும் **சிறில் றஞ்சித்** ஆகியோரின் அன்புத் தந்தையார்

அமரர்

## செல்லையா நீக்கிலஸ் செல்வநாயகம்

(இல. 44, மாட்டின் ஒழுங்கை, யாழ்ப்பாணம்)

அவர்களின் மரணச் செய்தி அறிந்து ஆழ்ந்த துயர் அடைகின்றோம். அன்னாரின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
வலம்புரி நிர்வாகம்

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் திருமதி

## ஸ்ரீலோகநாதன் வசந்தா



திதி : மாசிமாத திருதியை (5.3.2022)

எங்களோடு வாழ்ந்தகாலம் மறைந்து
ஓடிவிட்டாலும் உங்கள் பாசமும் அன்பும்
அரவணைப்பும் எங்கள் கண்முன்னே
என்றென்றும் நிலைத்திருக்கும்

(10484)

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

[illegible] வீதி,
[illegible]ம்.

077 271 9000

அன்புக் கணவன் செ. ஸ்ரீலோகநாதன்
அன்பு மகன் வித்தகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்ப்பாணப் பல்கலைக்கழக 35 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வுகள்.

# வெளியேறுங்கள்; இல்லாவிட்டால் வெளியேற்றுவேன்

## அரசை விமர்சிப்பவர்களுக்கு கோட்டா எச்சரிக்கை

(கொழும்பு)

**அரசை விமர்சிப்பவர்களுக்கு அமைச்சுப் பதவி எதற்கு? அமைச்சரவையிலிருந்து கொண்டு அரசை விமர்சிப்பவர்கள் ஒன்றில் தாமாக வெளியேற வேண்டும். இல்லையேல் எனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி அவர்களை நானே வெளியேற்றுவேன்." என கடுந்தொனியில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

அரசின் சிரேஷ்ட அமைச்சர்களுடன் நேற்று முன்தினம் நடத்திய அவசர கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது, "நான் 69 இலட்சம் மக்களின் ஆணையுடன்தான் ஆட்சி அதிகாரத்தைக் கையில் எடுத்தேன். எனக்கு ஆணை வழங்கிய மக்களை ஏமாற்றவும் மாட்டேன் அவர்களுக்குத் துரோகம் செய்யவும் மாட்டேன்.

நாடு இன்று பொருளாதார ரீதியில் பெரும் சவால்களை எதிர்நோக்கியுள்ளது. இந்நிலையில், அமைச்சரவையில் இருக்கும் சிலர், பொறுப்பிழந்து, பதவி என்ற ஒன்றை மறந்து கீழ்த்தரமாகச் செயற்படுகின்றனர். அரசைக் கண்டபடி விமர்சிக்கின்றனர். இவர்களுக்கெல்லாம் அமைச்சுப் பதவி எதற்கு?

அரசை வீழ்த்துவதுதான் இவர்களின் நோக்கமாக இருந்தால் அது ஒருபோதும் சாத்தியமாகாது. எமது அரசை எவராலும் அசைக்கவே முடியாது" - என ஜனாதிபதி தெரிவித்தார். (நி)

## அமைச்சரவை கடமைகளில் இருந்து விலகுகிறார் வாசுதேவ

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களான உதய கம்மன்பில மற்றும் விமல் வீரவன்ச ஆகியோருக்கு நீதி கிடைக்கும் வரை தான் அமைச்சரவை கடமைகளில் இருந்து விலகிக் கொள்வதாக நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

நேற்று விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (நி)

# கோட்டாபயவை ஆட்டி படைக்கும் பசில்

## பதவி பறிப்பிற்குப் பின் தகவல்களை அம்பலப்படுத்திய விமல்



(கொழும்பு)

நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ தான் விரும்பியவாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை ஆட்டி படைத்து வருவதாக முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார். இந்த செய்தியாளர் சந்திப்பில் வாசுதேவ நாணயக்கார, உதய கம்மன்பில, அத்துரலியே ரதன தேரர் உள்ளிட்டோர் கலந்துக்கொண்டனர்.

பசில் அமெரிக்காவுக்காக சேவையாற்றுகிறார். அவருடைய சொத்துகள் அமெரிக்காவில் தான் இருக்கின்றன. நாட்டின் பொருளாதார பிரச்சினையை மிக மோசமான அனர்த்தமாக மாற இடமளித்து, அமெரிக்காவின் தந்திரமான வழிமுறைக்குள் நாட்டை சிக்க வைப்பதே பசில் ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்டுள்ள ஒப்பந்தம்.

இப்படியான மனிதனின் தனிப்பட்ட வில்லத்தனத்திற்கு நாட்டை பலி கொடுக்க இடமளிக்க முடியாது. பதவி பறிக்கப்பட்டமை இது தொடர்பில் எமக்கு கவலையோ, கோட்டா பய மீது கோபமே இல்லை. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பசில் ராஜபக்ஷவினால் விரும்பியவாறு ஆட்டி வைக்கப்படும் பாத்திரம்.

நான் அமைச்சராக பதவி வகித்த துறையுடன் சம்பந்தப்பட்ட விடயங்களில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டேன். உதய கம்மன்பில அப்படியே செயற்பட்டார்.

அந்த விடயத்தில் நாங்கள் மகிழ்ச்சியடைகின்றோம். பதவிகள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் எமது அரசியல் வழமை போலவே இருக்கும். நாங்கள் மக்கள் ஆணைக்கு ஏற்ப செயற்பட்டு வந்தோம். மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகளுக்கு எதிராக செயற்படும் போது நாங்கள் அரசாங்கத்திற்கு எதிராக செயற்பட்டுள்ளோம்.

அதேபோல் மக்கள் ஆணையை பாதுகாக்க நாங்கள் நடவடிக்கை எடுத்துள்ளோம். இதற்காக எங்களை அமைச்சர் பதவிகளில் இருந்து நீக்கி இருந்தால், நாங்கள் அ[illegible] கொள்கிறோம் என விமல் வீரவன்ஸ குறிப்பிட்டுள்ளார். (நி)


# 31 ஆம் நாள் நினைவலைகள்

மண்ணில் மழலையாக
15 . 07 . 1943



விண்ணில் நிறைவாக
30 . 01 . 2022

அமரர். சண்முகம் பஞ்சாட்சரம் [கலாபூசணம் கலைஞானச்சுடர்]

பிரபல விஷகடி வைத்தியர்
ஓய்வு நிலை விற்பனைத் திணைக்கள ஊழியர்

(திதி: அமரபக்க திரயோதசி)

விஷகடியால் அவதியுற்ற எத்தனை பேருக்கு
மீள்வாழ்வு அளித்த எமதன்பு அப்பாவே
நிஜ வாழ்வில் பல கஷ்டங்களையும் சுமந்து
நிதானமுடன் அவையெல்லாம் தாங்கி
நல்ல நிலைக்கு எங்களை ஆளாக்கி
நாமறியா இடம் சேர்ந்த அப்பாவே
எல்லாம் நடந்து திங்களது ஒன்றான போதும்
உங்கள் நினைவுகள் இன்னமும் நீங்கவில்லை!

39, வேலப்பர் வீதி, அரியாலை,
யாழ்ப்பாணம்.

குடும்ப உறவுகள்

(10474)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப்கான் அணிக்கெதிரான முதல் இருபது-20

## பங்களாதேஷ் வெற்றி



ஆப்கானிஸ்தான் அணிக்கெதிரான முதலாவது இருபது-20 போட்டியில், பங்களாதேஷ் கிரிக்கெட் அணி 61 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் இரண்டு போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரில், 1-0 என்ற கணக்கில் பங்களாதேஷ் கிரிக்கெட் அணி முன்னிலை பெற்றுள்ளது.

டாக்கா மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 155 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, லிடொன் தாஸ் 60 ஓட்டங்களையும் அபீப் ஹொசைன் 25 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

ஆப்கானிஸ்தான் அணியின் பந்துவீச்சில், ஃபசல்ஹக் பாரூக்கி மற்றும் அஸ்மத்துல்லாஹ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் ரஷித்கான் மற்றும் குய்ஸ் அஹமட் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 156 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய ஆப்கானிஸ்தான் அணி, 17.4 ஓவர்கள் நிறைவில் 94 ஓட்டங்களுக்கு சுருண்டது.

இதனால், பங்களாதேஷ் கிரிக்கெட் அணி 61 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, நஜிபுல்லா சத்ரான் 27 ஓட்டங்களையும் அஸ்மத்துல்லா உமர்சாய் 20 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.


பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், நசும் அஹமட் 4 விக்கெட்டுகளையும் சொரிபுல் இஸ்லாம் 3 விக்கெட்டுகளையும் சகிப் அல் ஹசன் 2 விக்கெட்டுகளையும் முஷ்டபிசுர் ரஹ்மான் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக, 4 விக்கெட்டுகளை வீழ்த்திய நசும் அஹமட் தெரிவு செய்யப்பட்டார். (4-6)

## டெஸ்ட் தொடரே

# உண்மையான கிரிக்கெட்

## விராட் கோலி



இந்தியா-இலங்கை மோதும் முதலாவது டெஸ்ட் நேற்று ஆரம்பமானது. இது இந்திய அணியின் முன்னாள் கப்டன் விராட் கோலிக்கு 100 ஆவது டெஸ்ட் ஆகும்.

இந்நிலையில், பிசிசிஐ வெளியிட்டுள்ள வீடியோ ஒன்றில் விராட் கோலி தனது 100 ஆவது டெஸ்ட் போட்டி குறித்து பேசியுள்ளார்.

அப்போது அவர் கூறியதாவது, 100 டெஸ்ட் போட்டிகளில் விளையாடுவேன் என ஒரு போதும் நினைத்ததில்லை. எனக்கு இது மிக நீண்ட பயணம். நான் நிறைய கிரிக்கெட் விளையாடி உள்ளேன். நான் எனது உடற் தகுதிக்காக கடுமையாக உழைத்துள்ளேன்.

என்னைப் பொறுத்த வரையில் இந்த டெஸ்ட் போட்டி குறித்து மிகவும் மகிழ்ச்சியாகவும் பெருமையாகவும் உணர்கிறேன்.

எனது பயிற்சியாளரும் இது குறித்து மகிழ்ச்சி அடைந்துள்ளார்.

நாட்டிற்காக அதிக ரன்களை எடுக்க வேண்டும் என்ற எண்ணமே எப்போதும் இருந்தது.

எனவே, நீண்டநேரம் பட்டிங் செய்து வெற்றி பெற வேண்டும் அல்லது முதல் இன்னிங்ஸ் முன்னிலை பெற வேண்டும் என்பதே எனது எண்ணமாக இருந்தது.

இதைத் தான் நான் எப்போதும் பின்பற்றி வருகிறேன். என்னைப் பொறுத்த வரை டெஸ்ட் கிரிக்கெட் தான் உண்மையான கிரிக்கெட் என தெரிவித்தார். (4-6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2526

**சாரங்கன்**


ஆம்லேட் விலையை ஏத்தி இருக்கானுங்க என்னடான்னு கேட்டா உக்ரேய்ன்ல சண்டையாம்.



உக்ரேய்ன் போருக்கும் ஆம்லேட்டுக்கும் என்னடா சம்பந்தம்

**நிதர்சினி**

பொறாமையில இருந்து மின்சாரம் தயாரிக்கிற டெக்னிக்கை கண்டு பிடிச்சா...



நம்ம நாட்டுல இருந்து உலகத்துக்கே மின்சாரம் சப்ளை பண்ணலாம்...

**மகிந்தன்**

யூ டியூப் பாத்து கள்ள நோட்டு அடித்த பெண் கைது - செய்தி



ஏன்...? ஆபிஸர்...?
யூ டியூப் பார்த்து சமையல் பண்ற பொண்டாட்டியலாம் கைது பண்ண மாட்டிங்கலா..??

**உமையாள்**

கேஸ் இல்லன்னு எலக்ட்ரிக் அடுப்பு வாங்கினா கரன்ட் இல்ல...




கரன்ட் இல்லன்னு ஜெனரேட்டர் வாங்கினா டீசல் இல்ல

**கிருபா**

எது இன்று உன்னுடையதோ அது நாளை வேறொருவருடையதாகிறது.



அப்புறம் ஏன் ஆண்டவா நான் வாங்கிய கடன் மட்டும் என்னுடையதாகவே இருக்குது

**மதுரிக்கா**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வாதிகார அரசை வீழ்த்த வேண்டும் பொன்சேகா வலியுறுத்து

(கொழும்பு)

நாட்டு மக்களை ஏமாற்ற பல நாடகங்களை அரங்கேற்றும் ஊழல், மோசடி மிக்க இந்தச் சர்வாதிகார அரசை உடனடியாக வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா வலியுறுத்தினார்.

"ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் நான் சட்டம், ஒழுங்கு அமைச்சை பொறுப்பேற்ற பிறகு, நிச்சயம் ஊழல், மோசடிகளுக்கு முடிவு கட்டுவேன்" என்றும் அவர் சூளுரைத்தார்.

இராணுவத்தில் 4 இலட்சம் ரூபாய் மோசடியில் ஈடுபட்ட ஒரு இராணுவ அதிகாரியை வீட்டுக்கே அனுப்பினேன். எனவே, மேல் மட்டத்தில் இருந்து கீழ் மட்டம் வரை நிச்சயம் கை வைப்பேன்.

முதலில் மேல் மட்டத்தில் தான் கை வைக்க வேண்டும். அப்போது கீழ் மட்டம் தானாகவே திருந்திவிடும். (நி)




## வீட்டுக்கிருத்திய, அந்தியேட்டி அழைப்பு

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்".

அமரர். செல்வி. **குணரட்ணம் கணபதிப்பிள்ளை**

இப் பூவுலகில் எமது குடும்பத்தின் நலனுக்காகவே பிறந்து, எம்மை வளர்த்து ஆளாக்கி 03.02.2022 வியாழக்கிழமை வானுறையும் தெய்வத்துள் ஈர்க்கப்பட்ட எங்கள் அன்பு அன்ரி செல்வி. **குணரட்ணம் கணபதிப்பிள்ளை** அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை 03.03.2022 வியாழக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அந்தியேட்டிய நிகழ்வுகள் 05.03.2022 இன்று சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளன. அன்னாரின் இழப்பையொட்டி பல வழிகளிலும் எமக்கு ஆறுதல் கூறியவர்கள், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்வ துடன் அந்தியேட்டி நிகழ்வுகளைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதைத் தனிப்பட்ட அழைப்பாக தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.

மானிப்பாய் வீதி,
ஆனைக்கோட்டை.

077 659 5256

குடும்பத்தினர்.

(10475)


## இராசிபலன்

05.03.2022
மாசி 21, சனிக்கிழமை
திருதியை முன்னிரவு 10.56 மணிவரை

ரேவதி பின்னிரவு 4.38 மணிவரை
சுபநேரம் -3.26-4.56 மணிவரை
இராகுகாலம் -9.26-10.56 மணிவரை

சந்திராஷ்டமம்- பூரம்

**வளவன்**

**மேஷம்** கொடுக்கல்-வாங்கல்களில் அதிக அக்கறை காட்டுவீர்கள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**கடகம்** பூர்வீக சொத்துக்களால் நன்மையுண்டு, புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், உடல் நலம் சீராகும், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள்.

**துலாம்** வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், பொது வாழ்வில் புகழ் கூடும் நாள், தெய்வீகச் சிந்தனை மேலோங்கும் நாள், கடன் பிரச்சினைகள் தீரும் வாய்ப்புண்டு.

**மகரம்** பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றமுண்டு.

**ரிஷபம்** பிரபலமானவர்களின் அறிமுகம் கிடைக்கும், வீட்டை பராமரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், இல்லத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**சிம்மம்** சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமல் இருப்பது நல்லது, நடப்பதெல்லாம் நன்மைக்கென நினைக்க வேண்டிய நாள், மருத்துவச் செலவுகள் ஏற்படலாம்,

**விருச்சிகம்** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், முன்னேற்றம் அதிகரிக்கும் நாள்.

**கும்பம்** எதிர்பார்ப்புக்கள் எளிதில் ஈடேறும் நாள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, வாக்கு மேன்மையுண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**மிதுனம்** தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள்.

**கன்னி** தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**தனுசு** திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், உறவினர்களிடையே ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், பெற்றோர் வழியில் பிரியம் கூடும்.

**மீனம்** நிதானத்தோடு செயற்பட வேண்டிய நாள், திடீர் பயணத்தால் திசை திருப்பங்கள் ஏற்படலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

நாம் செய்யும் தர்மம் நம்மையும் நம் பரம்பரையையும் காத்திடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.பல்கலை.பட்டமளிப்பு விழாவில் மறைந்த மாணவிக்கு ஏகாந்த நிலையில் பட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 35 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் மாணவி ஒருவருக்கு ஏகாந்த நிலையில் பட்டமும், நினைவுத் தங்கப் பதக்கமும் வழங்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற யாழ்.பல்கலையின் 35 ஆவது பட்டமளிப்பு விழாவிலேயே இம்மனதை உருக்கும் நிகழ்வு நடைபெற்றுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடத்தின் ஊடகத் துறையில் சிறப்புக் கலைமாணி பட்டம் பெற்ற செல்வி. தில்காந்தி நவரட்ணம் பட்டமளிப்பு விழாவின் போது உயிருடன் இல்லாத நிலையில் அவருக்கான சிறப்புப் பட்டம் அவரது தாயாரிடம் வழங்கப்பட்டது.




இதேவேளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகத் துறையில் சிறப்புத் தேர்ச்சிக்காக வழங்கப்படும் மறைந்த மாணவன் சகாதேவன் நிலக்ஷன் ஞாபகார்த்த தங்கப்பதக்கமும் மேற்படி மாணவிக்கே வழங்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (க-4-18-33)

# சங்கானை ப.தெ.வ.அ.ச ஊழியர்கள் போராட்டம்



(அராலி)

சங்கானை பனை தென்னை வள அபிவிருத்தி சங்க கூட்டுறவு பணியாளர்கள் நேற்று காலை 10 மணியளவில் சங்கானை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க முன்றலில் போராட்டமொன்று முன்னெடுத்தனர்.

இப் போராட்டத்தில் பணியாளர்கள் "ஊதியத்தை அதிகரி. கிளை முகாமையாளரின் நியமனத்தை நிரந்தர நியமனமாக்கு. பணியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்கு. தற்காலிக ஊழியர்களுக்கு நிரந்தர நியமனத்தை வழங்கு. வேலையோ அதிகம் சம்பளமோ குறைவு" என்று எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தி கோஷமிட்டவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். (க-4-104)



அச்சுவேலிப் பகுதியில் நேற்று முன்தினம் மாரடைப்பால் உயிரிழந்த இராணுவ வீரரின் இறுதி அஞ்சலி நிகழ்வு நேற்று இராணுவ அணி வகுப்புடன் நடைபெற்றது.

# வட்டார உறுப்பினர்களின் அனுமதியின்றி அபிவிருத்தி முன்னெடுக்க முடியாது

## சாவகச்சேரி நகரசபையின் தீர்மானம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட வட்டாரங்களில் நகரசபையின் வட்டார உறுப்பினர்களின் சிபாரிசு இன்றி பிரதேச செயலகம் ஊடாக முன்னெடுக்கப்படுகின்ற அபிவிருத்தித் திட்டங்களுக்கு நகரசபை அனுமதி வழங்க மாட்டாது எனத் தெரிவிக்கப்பட்ளது.

அண்மையில் சாவகச்சேரி நகரசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே குறித்த தீர்மானம் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அரசாங்கத்தால் நாடளாவிய ரீதியாக வட்டார உறுப்பினர்களுக்கான ஒதுக்கீடாக வழங்கப்பட்டிருக்கும் 4 மில்லியன் ரூபாய் நிதிக்கான அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தென்மராட்சிப் பிரதேசத்தில் நகரசபையின் வட்டார உறுப்பினர்களின் பங்களிப்பின்றி ஒருசில தரப்பினரால் தயாரிக்கப்பட்டு பிரதேச செயலகம் வரை அந்த முன்மொழிவுகள் சென்றிருப்பதாக பெரும்பாலான உறுப்பினர்கள் சபையில் அதிருப்தி வெளியிட்டிருந்த நிலையில் குறித்த அதிரடித் தீர்மானம் சபையில் நிறைவேற்றப்பட்டது.

தீர்மானப் பிரதியை தென்மராட்சி பிரதேச செயலருக்கு அனுப்பி வைக்கவும் முடிவெடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வட்டார உறுப்பினர்களின் பங்களிப்பின்றி வட்டாரங்களில் குறித்த அபிவிருத்தி வேலைத்திட்டம் தன்னிச்சையாக மேற்கொள்ளப்படுமானால் பிரதேச செயலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் ஒன்றையும் முன்னெடுப்போம் எனவும் சபை உறுப்பினர்கள் மேலும் எச்சரித்தனர். (4-6-30)

# எழில்-சுகந்தி குறுந்திரைப்பட காட்சிகள்

(யாழ்ப்பாணம்)

இயக்குனர் விமல்ராஜின் இயக்கத்தில் சர்வதேச விருதுகள் பெற்ற எழில் மற்றும் சுகந்தி குறுந்திரைப்படங்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணி மற்றும் மாலை 4 மணி காட்சிகளாக இரு காட்சிகளாக யாழ்.ராஜா திரையரங்கில் திரையிடப்படவுள்ளன. (க-4-33)

# யாழ்.மாவட்ட செயலக மடல் வெளியீடு

(குப்பிழான்)

யாழ்.மாவட்டச் செயலகத்தின் "யாழ்.மாவட்டச் செயலக மடல்" நேற்று முன்தினம் வியாழக்கிழமை வெளியீடு செய்து வைக்கப்பட்டது.

யாழ்.மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் வெளியீட்டுக் குழு சார்பில் யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன் மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசனுக்கு வழங்கி வெளியீடு செய்து வைக்கப்பட்டது.

இதேவேளை, யாழ்.மாவட்டச் செயலக மடலானது 2021 ஆம் ஆண்டின் தை மாதம் தொடக்கம் ஆனி மாதம் வரையிலான யாழ்.மாவட்டச் செயலகத்தினால் யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திச் செயற்திட்டங்களை உள்ளடக்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (4-6-18)



யாழ்.குருநகர் கடற்கரை பகுதியினை யாழ் பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து நேற்றைய தினம் சிரமதானப் பணியில் ஈடுபட்டனர். (படம் : ஏனெஸ்ட்)

குருவே துணை
வாழ்க வையகம் வாழ்க வளமுடன்
மனவளக்கலை யோகப் பயிற்சிகள்
யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவில் அன்பர்களுக்கோர் இனிய செய்தி!
❖ அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல், ஆலயம் பதினாயிரம் நாட்டல், பின்னருள தருமங்கள் யாவும், பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல், அன்னயாவினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் ❖
என்ற பாரதி இயம்பியமைக்கு அமைய அதனிலும் மேலான 'உலகப்பெருநிதி அறுபத்தைந்தாம் கலையாகிய "மனவளக்கலையை"
இந்த ஆண்டு முழுவதும் யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவிலில்
❖ முதற்கட்ட 7 நாட்கள் கொண்ட உடற்பயிற்சி காயகல்பம்
❖ அடுத்து வரும் அகத்தாய்வு 1... 2... 3... பயிற்சிகளுக்கும்
"அன்னை பார்வதி அறக்கட்டளையை சார்ந்த அன்பர்கள் பெருமனம் கொண்டு அனுசரணை வழங்க திருவுளம் கொண்டுள்ளார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியை அறிவிப்பதில் பேருவகை கொண்டுள்ளோம்...
எனவே பயிற்சியாளர்கள் கட்டணமேதுமின்றி பயிற்சிகளை பெற்றுக்கொள்ள முடியும்.
❖ உடல் நலத்திற்கு- எளிய முறை உடற்பயிற்சி ❖ உயிர் வளத்திற்கு- சித்தர்களின் வழிவந்த காயகல்ப பயிற்சி
❖ மன அமைதிக்கு- தியான பயிற்சிகள் ❖ அறிவு வல்லமைக்கு - அகத்தாய்வு பயிற்சிகள்
❖ உறவுகள் மேம்பட - தற்சோதனைப் பயிற்சிகள்
காலம்: 05.03.2022 சனிக்கிழமை
நேரம்: மாலை 5.00 மணி தொடக்கம் இரவு 7.00
பயிற்சியை வழங்குபவர் : துணைப் பேராசிரியர் அருள்நிதி த.நந்தகுமாரன்
துணை பேராசிரியர் ந.ஜெயகிருஷ்ணா
மற்றும் அருள்நிதி க.தவமணிதாசன், அருள்நிதி த.சிவகாமி, அருள்நிதி க.ஜெயராணி
வருக வருக நலம் பெருக பெறுக
வாழ்க வையகம்
வாழ்க வளமுடன்
தொடர்புகளுக்கு : யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்
இல.81, பிறவுண் வீதி, கொக்குவில் கிழக்கு,
கொக்குவில், யாழ்ப்பாணம்.
தொ.பே- 021 222 2772, 077 736 8745, 071 440 3268, 071 424 6309
(C-3892)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொவிட் சடலங்கள் உறவினர்களிடம் கையளிக்கப்படும்

# புதிய சுற்றுநிருபம் வெளியீடு

(கொழும்பு)

## கொவிட் தொற்றினால் மரணிப்போரின் உடல்களை உறவினர்களிடம் ஒப்படைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.



இன்று முதல் அமுலுக்கு வரும் வகையில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்த்தனவினால் இது தொடர்பான திருத்தப்பட்ட சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய குறித்த சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய நிபந்தனைகளாவன.


கொவிட் தொற்றினால் மரணிப்போரின் உடல்கள் சுகாதார ஊழியர்களால் சீலிடப்பட்டு, சவப் பெட்டியில் வைக்கப்படும். (உறவினர்களால் சவப்பெட்டி வழங்கப்பட வேண்டும்).

உடல் விடுவிக்கப்பட்டு 24 மணித்தியாலங்களுக்குள் அடக்கம்/தகனம் செய்யப்பட வேண்டும்.

இவ்வாறு விடுவிக்கப்படும் உடலை அடக்கம்/ தகனம் செய்யப்படும் இடத்தை தவிர வேறு எந்தவொரு இடத்திற்கும் கொண்டு செல்ல அனுமதிக்கப்படாது. உடல் பதனிடப்படக்கூடாது.

உடல் அடக்கம்/தகனம் செய்யப்படும் இடம் உறவினர்களின் விருப்பத்திற்கு அமைய மேற்கொள்ளலாம். (நீதிமன்ற உத்தரவுகள் இல்லாத நிலையில் மாத்திரம்) உடலின் அடக்கம்/ தகனம் ஆனது, உறவினர்களின் செலவில் மேற்கொள்ளப்பட வேண்டும். இதன் பிற்பாடு சுகாதார அமைச்சு அல்லது வேறு எந்தவொரு அமைச்சுகள், திணைக்களங்களோ பொறுப்பேற்காது என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)

# போக்குவரத்து அமைச்சராக திலும் பதவியேற்பு



(கொழும்பு)

திலும் அமுனுகம போக்குவரத்து அமைச்சராக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டுள்ளார்.

அமைச்சரவை மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்கு அமைவாக போக்குவரத்து இராஜாங்க அமைச்சராக செயற்பட்டு வரும் திலும் அமுனுகம தற்போது போக்குவரத்து அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். (நி)

# மீண்டும் இராஜாங்க அமைச்சராக அருந்திக பதவிப் பிரமாணம்

(கொழும்பு)

இராஜாங்க அமைச்சர் பதவியில் இருந்து இராஜினாமா செய்த அருந்திக பெர்னாண்டோ மீண்டும் தென்னை, கித்துள், பனை மற்றும் றப்பர் செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சராக பதவிப் பிரமாணம் செய்து கொண்டுள்ளார். அருந்திக பெர்னாண்டோ அண்மையில் இடம் பெற்ற சம்பவம் காரணமாக தனது இராஜாங்க அமைச்சர் பதவியை இராஜினாமா செய்திருந்தார்.

பெப்ரவரி 2 ஆம் திகதி காலை ராகம மருத்துவ பீட விடுதியில் மாணவர்கள் குழு மீது தாக்குதல் நடத்தப்பட்டமை தொடர்பில் இராஜாங்க அமைச்சர் மற்றும் அவரது மகன் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)


மணிவிழா வாழ்த்தும் சேவைநலன் பாராட்டும்



திருமதி. கெங்கேஸ்வரி கலாவர்ணன்
(பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி SLTS I)
ஆசிரியர்
(யா/பெரியபுலம் மகாவித்தியாலயம்)

ஆசிரியர் சேவை விபரம்
யா/இளையதம்பி இந்து வித்தியாலயம்
26.03.1990 - 09.05.2010
யா/பெரியபுலம் மகாவித்தியாலயம்
10.05.2010-04.03.2022

ஆசிரியப் பணியை அர்ப்பணிப்புடன் நிறைவேற்றி இன்று ஓய்வுபெறும் மணிவிழா நாயகியை வாழ்த்துகின்றோம்

[10461]

வாழ்த்துவோர்:- யா/பெரியபுலம் ம.வி. ஆசிரியர் நலன்புரிக்கழகம்.



JAFFNA EDUCATION FAIR 2022
Your Future Begins Here...



உயர்கல்வி மற்றும் துறைசார் வழிகாட்டல் கண்காட்சி!
Higher Education & career guidance exhibition

நீங்கள் உயர்தரத்தை நிறைவு செய்தவரா?
அனுமதி இலவசம்

உயர்கல்விக்கான உங்கள் கனவுகளை நனவாக்கிக் கொள்ளுங்கள்

1. 15 க்கும் மேற்பட்ட இலங்கையின் முன்னணி உயர்கல்வி நிறுவனங்கள் பங்குபற்றுகின்றன.
2. முன்னணி பல்கலைக்கழகங்களின் பல்வேறு Bachelors, HND, Diploma, Top-up, Masters படிப்புகளுக்கான திட்டங்களைத் தெரிவு செய்யலாம்.
3. உடனடி அனுமதியுடன் புலமைப்பரிசில்கள்.
4. கண்காட்சியில் கலந்து கொள்ளும் உங்களுக்காக விசே விலைக்கழிவுகளுடன் பாடநெறிக்கான கட்டணங்கள்.

பின்வரும் துறைகளில் உயர்கல்விக்கான வாய்ப்புகளைத் தெரிந்து கொள்ளலாம்

Information Technology, Software Engineering, Computer Science, Business Management, Engineering, Civil Engineering, Marine Engineering, Law, Accountancy & finance, Medicine, Biomedical Science, Psychology, Architecture, Digital Marketing

விபரங்களுக்கு அழையுங்கள் – 0722600620

11th | 12th March 2022 | From 10.00 am to 6.00 pm | @ The Valampuri Hotel, Jaffna

Main Sponsor: A•P•I•I•T Inspire love for learning
Co-Sponsors: INFORMATICS INSTITUTE OF TECHNOLOGY, LITHAN, CLaaS DIGITAL ACCELERATOR
Official event partner: CICRA CAMPUS
Electronic Media Partners: DAN, தமிழ் 99.5 99.1
Print Media Partners: STUDENT Life, வலம்புரி
Organized by: EVOLUTION
(இ)



பாராட்டி வணங்குகின்றோம்

ஸ்ரீ வேதவித்தியாசாகரர் சுவாமிகள்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக 35 ஆவது பட்டமளிப்பு வைபவத்தில் இன்றையதினம் கலைமாணி (B.A) பட்டத்தினை பெறுகின்ற வணக்கத்திற்குரிய
ஸ்ரீ வேதவித்தியாசாகரர் சுவாமிகள்
(8 வது குருபீடாதிபதி, ஸ்ரீ சிவகுருநாத குருபீடம் வேதாந்தமடம் ஸ்ரீ மகாதேவ சுவாமிகள் ஆச்சிரமம்) அவர்களுக்கு அன்பர்கள் சார்பில் பாராட்டுதல்களை தெரிவிப்பதுடன் ஆசிகளையும் வேண்டி நிற்கின்றோம்.

Happy Graduation

(10477)

அன்பர்கள் : த.ஸ்ரீஸ்கந்தராஜா, கோ.செல்வராஜா
சுதர்சன் - விபூஷணி, சத்தியன் - ஷயா, சயந்தன் - தட்சாயினி


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உக்ரேயின் விவகாரத்தில்

## சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தலையீடு

(நெதர்லாந்து)

உக்ரேயினில் சாத்திய மான யுத்தக் குற்றங்கள் இடம்பெற்றமை தொடர்பில் ஆதாரங்களைத் திரட்டும் செயற்பாடுகளை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் ஆரம்பித்துள்ளது.

யுத்தக் குற்றங்கள் இடம் பெற்றமை தொடர்பில் விசாரணையை ஆரம்பிக்குமாறு 39 உறுப்பு நாடுகள் வலியுறுத்தியதை அடுத்து அது தொடர்பான உடனடி விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக சர்வதேச குற்றவியல் நீதிமன்ற தலைமை வழக்கு தொடுநர் கரீம் கான் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ரஷ்ய படையினரின் தாக்குதல்கள் காரணமாக இடம் பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள், மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனப்படுகொலை பற்றிய குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்படும்.

உக்ரேய்னோ ரஷ்யாவோ சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் உறுப்பு நாடுகளாக இல்லாத போதிலும் நீதிமன்றத்தின் அதிகார வரம்பை உக்ரேய்ன் ஏற்றுக்கொண்டுள்ளது.

பொதுமக்கள் மற்றும் பொது மக்களின் இலக்குகள் மீது நேரடியான தாக்குதல்கள் நடத்தப்படும் பட்சத்தில் அது யுத்தக் குற்றங்களாக அமையும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தாக்குதல்கள், இராணுவ நோக்கங்களை இலக்காகக் கொண்டாலும், பயன்படுத்தப்படும் ஆயுதங்கள் துல்லியமாக இல்லாது பரந்த - பயன்பாட்டு ஆயுதங்களாக இருக்கும் பட்சத்தில் அதுவும் போர்க்குற்றங்களாக கருதப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கார்கிவ் நகரம் மீதான ரஷ்யாவின் தாக்குதல்களில் பொதுமக்கள் பலியானதை அடுத்து, ரஷ்யா யுத்தக் குற்றங்களில் ஈடுபட்டுள்ளதாக உக்ரேய்ன் ஜனாதிபதி வெலெடிமீர் ஜெலென்ஸ்கி குற்றஞ் சாட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# ஐரோப்

## ரஷ்யா

(கீவ்)

### உக்ரேயினில் உள்ள
### கட்டடத்தின் மீது நே
### அணுமின் நிலையத்தை

நேற்று அதிகாலை இந்த உக்ரேய்ன் அணுமின் நிலையத்தின் மீதான ரஷ்ய படைகளின் தாக்குதலால் அங்கிருந்த கட்டடங்களில் ஒன்றான ஐந்து மாடி பயிற்சி கட்டடம் தீப்பிடித்தது. எனினும் அணு உலைக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. என்றாலும் நெருப்பை விரைவில் கட்டுப்படுத்தா விட்டால் அணு உலைக்கு தீ பரவக் கூடும் என்று அச்சம் ஏற்பட்டது.

உக்ரேய்னிய அவசரகால சேவை அதிகாரிகள் தொடக்கத்தில் அணுமின் நிலையத்தை அணுக முடியாத வகையில் தடுக்கப்பட்டதாகத் தெரிவித்தனர். தொடர்ந்து தீயணைப்பு வீரர்கள் தீயை அணைக்கத் தொடங்கி சுமார் ஒரு மணிநேர போராட்டத்திற்குப் பின்னர் தீ

# அதிரும் குண்டு சத்தங்களால் மன அழுத்தத்தில் மிருகங்கள்



(கீவ்)

ரஷ்யப் படைகள் உக்ரேய்னிய தலைநகரில் தாக்குதல் மேற்கொள்வதால், கீவ் நகரில் உள்ள உயிரியல் பூங்கா பார்வையாளர்களுக்கு மூடப்பட்டுள்ளது.

கீவ் நகர மிருகக்காட்சி சாலையில் யானைகள், ஒட்டகங்கள் மற்றும் உக்ரேய்னின் கொரில்லா உட்பட 200 இற்கும் மேற்பட்ட இனங்களைச் சேர்ந்த 4,000 உயிரினங்கள் உள்ளன.

இது குறித்து உயிரியல் பூங்காவின் தலைவரான கைரிலோ டிரான்டின் தெரிவித்ததாவது,

"பொருத்தமான கால்நடை சேவை மற்றும் போக்குவரத்தை வழங்குவது சாத்தியமற்றது.

எனவே விலங்குகளை வெளியேற்றுவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

இப்போதைக்கு, பத்து நாட்களுக்கு எங்களிடம் உணவுப் பொருட்கள் உள்ளன.

கடந்த வாரம், கீவ் நகர மிருகக்காட்சிசாலைக்கு அருகில் கடுமையான தாக்குதல்கள் பதிவாகியுள்ளன. இதனையடுத்து சமூக ஊடகங்களில் விலங்குகளின் நல்வாழ்வு குறித்த கவலைகள் பகிரப்பட்டன.

யானைகள் மற்றும் பிற பாதிக்கப்படக்கூடிய விலங்குகள் வெடிப்புகள் மற்றும் நெருங்கிய குண்டுவீச்சில் இருந்து சுடும்போது அவற்றை அமைதிப்படுத்த மயக்க மருந்து கொடுக்கப்படுகிறது.

விலங்குகளுக்கு போர் மிகவும் மன அழுத்தத்தை ஏற்படுத்துவதால், சில உட்புற அறைகள் மற்றும் நிலத்தடி அறைகளுக்கு மாற்றப்பட்டுள்ளன.

மேலும், எங்கள் கால்நடை மருத்துவர்கள் அவற்றின் நிலையை தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

சில உக்ரேய்னிய உயிரியல் பூங்காக்கள் ஏற்கனவே தங்கள் விலங்குகளை அண்டை நாடுகளுக்கு வெளியேற்றியுள்ளன என அவர் தெரிவித்தார். (நி)

# உக்ரேய்னிலுள்ள ரஷ்யர்களின் சொத்துகளை முடக்க பாராளுமன்றம் ஒப்புதல்

(கீவ்)

ரஷ்யாவுக்கு எதிராக பல்வேறு நாடுகளும் பொருளாதார தடை விதித்து வரும் நிலையில், உக்ரேய்னில் வசிக்கும் ரஷ்ய குடிமக்களின் சொத்துக்களை முடக்க அந்நாட்டு பாராளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது. (நி)

# ஒன்பதாவது நாளாக சண்டை நீடிப்பு ரஷ்ய படைகள் திணறல்

(கீவ்)

ரஷ்யா- உக்ரேய்ன் இரு தரப்பிலும் நிறைய உயிரிழப்புகளும், பல ஆயிரம் கோடி ரூபாய் சொத்துக்களும் சேதம் ஆகியுள்ள நிலையில் தொடர்ந்து சண்டை நடந்து வருகிறது. நேற்று வெள்ளிக்கிழமை 9 ஆவது நாளாக போர் நீடித்தது.

உக்ரேய்ன் நாடு நேட்டோ அமைப்பில் சேர்ந்தால் அது தனக்கு மிகப்பெரிய பாதுகாப்பு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்று கருதிய ரஷ்யா, கடந்த மாதம் அந்த நாட்டின் மீது போரை தொடங்கியது.

உக்ரேய்ன் மீது சரமாரியாக ஏவுகணைகளையும், குண்டுகளையும் வீசி ரஷ்யா தாக்குதல் நடத்தி வருகிறது. ஆனால் உக்ரேய்ன் நாட்டு ஜனாதிபதி ஜெலன்ஸ்கி ஒரு போதும் சரண் அடையமாட்டோம் என்று சொல்லி பதிலடி தாக்குதலை தீவிரப்படுத்தி உள்ளார்.

ரஷ்யா- உக்ரேய்ன் இரு தரப்பிலும் நிறைய உயிரிழப்புகளும், பல ஆயிரம் கோடி ரூபாய் சொத்துக்களும் சேதம் ஆகியுள்ள நிலையில் தொடர்ந்து சண்டை நடந்து வருகிறது.

தலைநகர் கீவ், 2 ஆவது பெரிய நகரமான கார்கிவ் ஆகிய இரு நகரங்களையும் குறி வைத்து ரஷ்ய ராணுவம் படைகளை நகர்த்தி உள்ளது. அந்த இரு நகரங்களிலும் புறநகர் பகுதிகளில் ரஷ்யா படைகளை குவித்துள்ளது. ஆனால் இதுவரை அந்த இரு நகரங்களுக்குள்ளும் ரஷ்ய படைகளால் செல்ல இயலவில்லை.

உக்ரேய்ன் மக்களின் கடும் ஆவேசமான எதிர்ப்பு காரணமாக ரஷ்ய படைகள் தொடர்ந்து முன்னேற முடியாமல் திணறலை சந்தித்துள்ளன. கடும் தாக்குதல் நடத்தினால் இலட்சக்கணக்கான மக்கள் உயிரிழக்க நேரிடும் என்பதால் ரஷ்ய படைகள், உக்ரேய்ன் அரசு அலுவலகங்களை அதிகளவில் குறிவைத்து தாக்குதலை நடத்துகின்றன.

இதனால் உக்ரேய்ன் படை ரஷ்ய பீரங்கி படைகள் தொடர்ந்து முன்னேற முடியாதபடி எதிர்த்தாக்குதலை தொடங்கி உள்ளனர். இது ரஷ்ய படைகளுக்கு கடும் சவாலாக மாறி உள்ளது.

கீவ் நகரை கைப்பற்றும் போது முழுமையாக அதை பிடிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் 64 கி.மீட்டர் தொலைவுக்கு நீண்ட ராணுவ அணிவகுப்பை ரஷ்யா தயார் நிலையில் வைத்து இருந்தது. ஆனால் எரிபொருள் கிடைக்காததாலும், உணவு பொருட்கள் குறிப்பிட்ட நேரத்துக்கு வந்து சேராததாலும் வீரர்கள் சோர்வடைந்து உள்ளனர்.

இது ரஷ்ய அணிவகுப்பை முடங்க செய்துள்ளது. திட்ட மிட்டபடி ரஷ்ய வாகன அணிவகுப்பு கீவ் புறநகர் பகுதிக்கு செல்ல இயலவில்லை. இதனால் முக்கிய நகரங்களை ரஷ்யா கைப்பற்றுவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. (நி)

# அணுமின் நிலைய தாக்குதலின் எதிரொலி சரிவைச் சந்தித்துள்ள ஆசிய பங்கு விலைகள்

ஐரோப்பாவின் மிகப்பெரிய அணுமின் நிலையமான, உக்ரேயினில் உள்ள ஸப்போ ரஷ்யா அணுமின் நிலையத்தில், நேற்று அதிகாலையில் ஏற்பட்ட தீ விபத்தைத் தொடர்ந்து ஆசியாவில் பங்கு விலைகள் சரிவைச் சந்தித்துள்ளன.

டோக்கியோ மற்றும் ஹொங்கொங் பங்குச் சந்தைகள் மிகுந்த வீழ்ச்சியை எதிர்கொண்டன. காலை வணிகத்தின் போது, ஆசியாவில் எண்ணெய் விலை உயர்ந்து காணப்பட்டது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு

# ...ப்பாவின் மிகப்பெரிய அணு உலை ...வின் தாக்குதலால் தீப்பற்றியது

**...ள ஐரோப்பாவின் மிகப்பெரிய ஸிப்போரிஷியா அணு மின் நிலைய... நேற்றுக் காலை தாக்குதல் நடத்திய ரஷ்ய படையினர், அந்த ...த்தை கைப்பற்றியதாக, உக்ரேய்ன் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.**




அணைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்தே ஸிப்போரிஷியா அணுமின் நிலையம் ரஷ்யப் படையினரால் கைப்பற்றப்பட்டது.

எனினும் அணுமின் நிலைய பணியாளர்கள் அங்கு தொடர்ந்து பணியாற்றி வருவதாகவும், மின் அலகுகளின் நிலையை கண்காணித்து வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, அணு உலை மீதான ரஷ்யத் தாக்குதலை மேற்கத்திய நாடுகளின் தலைவர்கள் உடனடியாக கண்டித்தனர்.

இது ரஷ்யாவின் பயங்கரமான, பொறுப்பற்ற செயல் என அவர்கள் குறிப்பிட்டனர். இது ஐரோப்பா முழுவதற்குமான அச்சுறுத்தல் என்றும் விமர்சனம் வெளியிடப்பட்டது.



இந்தத் தாக்குதலை அடுத்துக் கருத்து வெளியிட்ட உக்ரேய்ன் ஜனாதிபதி வொலோடிமிர் ஜெலென்ஸ்கி, ரஷ்யாவின் அணுசக்தி பயங்கரவாதத்திற்கு எதிராகக் கூடுதல் நடவடிக்கை எடுக்குமாறு உலக நாடுகளுக்கு அழைப்பு விடுத்தார்.

1986 செர்னோபில் ஏற்பட்ட அணு உலை விபத்தைப் போன்ற உலகளாவிய பேரழிவு ஏற்படுத்தக்கூடிய வாய்ப்பு தற்போது இருப்பதாகக் கூறிய ஜெலன்ஸ்கி, உடனடியாக விழித்துக் கொள்ளுமாறு ஐரோப்பிய நாடுகளுக்கு அழைப்பு விடுத்தார்.

மேலும் அணுமின் நிலையத்தின் மீது குண்டுவீச முயன்ற முதல் நாடு ரஷ்யா என்றும் அவர் தெரிவித்தார். (நி)

## பாகிஸ்தான் மசூதியில் குண்டுவெடிப்பு 30 பேர் பலி 50 இற்கும் மேற்பட்டோர் காயம்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானின் பெஷாவரில் உள்ள மசூதியில் பாரிய குண்டுவெடிப்பு சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

குறித்த மசூதியில் தொழுகையின் போது குண்டு வெடித்ததில் குறைந்தது 30 பேர் கொல்லப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சம்பவத்தில் 50 க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

குறித்த மசூதிக்குள் இரண்டு தாக்குதல்காரர்கள் நுழைய முயன்ற நிலையில், காவலுக்கு நின்ற பொலிஸ் அதிகாரிகள் இருவரை நோக்கித் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

இதில் காயமடைந்த ஒரு பொலிஸ் அதிகாரி உயிரிழந்துள்ளார்.

மற்றைய அதிகாரி பலத்த காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த துப்பாக்கிச்சூட்டை தொடர்ந்து, பள்ளிவாசலுக்குள் தற்கொலை குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (நி)





உக்ரேய்ன் மீது ரஷ்யா தொடர்ந்து 9 ஆவது நாளாக தாக்குதல் நடத்தி வருகிறது. ரஷ்ய தாக்குதலுக்கு உக்ரேய்ன் படைகளும் பதிலடி கொடுத்து வருகின்றன. உக்ரேய்ன் மீது ரஷ்யா நடத்தி வரும் தாக்குதலுக்கு உலக நாடுகள் கண்டனம் தெரிவித்து வருகின்றன.

இந்நிலையில், உக்ரேய்ன் மீது போர் தொடுத்துவரும் ரஷ்யா தாக்குதலை நிறுத்த வேண்டும் என வலியுறுத்தி ஒடிசா பூரி கடற்கரையில் மணல் சிற்பம் வரைந்து வலியுறுத்தி உள்ளார் சுதர்சன் பட்நாயக். ரஷ்ய ஜனாதிபதி புடின் மற்றும் உக்ரேய்ன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியையும் போரை நிறுத்துங்கள் என ஒருவர் வலியுறுத்தும் விதமாக இந்த மணல் சிற்பம் வடிவமைக்கப்பட்டு உள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரஷ்ய இன பூனைகளுக்கு தடை



(கீவ்)

உக்ரேய்ன் மீது நடத்தப்படும் தாக்குதலுக்கு ரஷ்யாவுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் அந்நாட்டு பூனைகளுக்கு உக்ரேய்னில் தடை விதிக்கப்பட்டு உள்ளது.

இதுபற்றி சர்வதேச பூனை கூட்டமைப்பு வெளியிட்டு உள்ள அறிவிப்பில், உக்ரேய்ன் குடியரசு மீது ரஷ்ய இராணுவம் படையெடுப்பு நடத்தி, தொடங்கியுள்ளது.

இந்த வன்முறைகளை கண்டுகொண்டு பேசாமல் இருந்து விட முடியாது.

அதனால், மார்ச் 1 ஆம் திகதியில் இருந்து, ரஷ்யாவில் உள்ள பூனை இனங்கள் எதனையும் இறக்குமதி செய்யவோ மற்றும் ரஷ்யாவுக்கு வெளியே எங்களது அமைப்பில் பதிவு செய்யவோ முடியாது என தெரிவித்து உள்ளது.

இந்த கட்டுப்பாடுகள் வருகிற மே 31 ஆம் திகதி வரை அமுலில் இருக்கும். தேவையானபோது, இந்த முடிவு மறு ஆய்வு செய்யப்படும்.

உக்ரேய்னில் நடப்பு சூழ்நிலையால் பாதிக்கப்பட்டு உள்ள பூனை இனங்களை பாதுகாக்க குறிப்பிட்ட ஒரு தொகையை ஒதுக்கவும் முடிவு செய்துள்ளோம் என்றும் தெரிவித்து உள்ளது. (நி)

# கல்லுமலை பிள்ளையார் ஆலய கட்டுமானப் பணிக்கு அனுமதி

(குருமன்காடு)

தொல்பொருள் திணைக் களத்தினால் இடைநிறுத்தப் பட்டிருந்த வவுனியா, சமனங் குளம் கல்லுமலை பிள்ளையார் ஆலயத்தினுடைய கட்டுமானப் பணிகளுக்கு தேசிய மரபுரிமை கள் அருங்கலைகள் மற்றும் மேம்பாட்டு அலுவல்கள் இராஜா ங்க அமைச்சர் விதுர விக்ரம நாயக்கவினால் அனுமதி வழங் கப்பட்டுள்ளது.

வவுனியா, சமனங்குளம் கல்லுமலை பிள்ளையார் ஆல யத்திற்கு நேற்று முன்தினம் அமைச்சர் தலைமையிலான குழுவினர் விஜயம் செய்த நிலை யிலே குறித்த கட்டுமானப் பணி க்கு அனுமதி வழங்கப்பட்டுள் ளது.

வவுனியா, சமனங்குளம் கல்லுமலை பிள்ளையார் ஆல யம் கடந்த 1952 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டு அப்பகுதி மக்க ளினால் வழிபாடு செய்யப்பட்டு வந்துள்ளது. குறித்த கோவில் அமைந்துள்ள மலைப்பகுதியில் தொல்பொருள் சின்னங்களான பண்டைய கற்தூண்கள், பாழ டைந்த செங்கல் படிவங்கள், கட்டட இடிபாடுகள் என்பன காணப்படுகின்றன.

அத்துடன், ஆலயத்தின் புனர்நிர்மாண கட்டுமானப் பணிகள் இடம்பெற்று வந்த நிலையில் தொல்பொருள் திணைக்களத்தினர் குறித்த ஆலயம் அமைந்திருந்த பகுதி தொல் பொருள் திணைக்களத் திற்கு சொந்தமான பகுதி என தெரிவித்து கட்டுமானப் பணி களுக்கு தடையுத்தரவு பிறப்பித் திருந்தனர்.

இவ்விடயம் தொடர்பில் ஆலய நிர்வாகனத்தினர் மற்றும் அப் பகுதி மக்கள், அரச அதிகாரிகள், அரசியல்வாதிகளுக்கு தெரியப் படுத்தியிருந்ததுடன், கடந்த கால ங்களில் கவனயீர்ப்புப் போராட் டங்களையும் முன்னெடுத்திருந் தனர்.

இந்நிலையில், இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாய க்க, பாராளுமன்ற உறுப்பின ரும், மாவட்ட அபிவிருத்தி குழு தலைவருமான கு.திலீபன், மாவட்ட அரசாங்க அதிபர் பீ.ஏ. சரத்சந்திர, வவுனியா பிரதேச செயலாளர் நா.கமலதாசன் மற் றும் தொல்பொருள் திணைக் கள அதிகாரிகள் அப்பகுதிக்கு விஜயம் மேற்கொண்டு ஆலய நிர்வாகத்தினர், மக்களின் கோரி க்கையினை கேட்டறிந்தனர்.

ஆலயத்தின் கட்டுமான பணி க்காக மாதிரி வரைபடத்தினை தொல்பொருள் திணைக்களத் திற்கு வழங்கி தொல் பொரு ட்களுக்கு சேதத்தினை ஏற்படு த்தாத வகையில், ஆலயத்தின் புனர்நிர்மாண வேலைகளை முன்னெடுத்து ஆலய வழிபா டுகளை மேற்கொள்ள அமைச் சரினால் அனுமதி வழங்கப்பட் டுள்ளது. (க-4-250)

# கலாசார மத்திய நிலையம் திறப்பு

(நெளுக்குளம்)

வவுனியா ஓமந்தை அரச வீட்டுத்திட்ட பகுதியில் அமைக் கப்பட்டிருந்த கலாசார மத்திய நிலையம் நேற்று முன்தினம் தேசிய மரபுரிமைகள் அருங் கலைகள் மற்றும் மேம்பாட்டு அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயகவினால் திறந்து வைக்கப்பட்டது.

2018 ஆம் ஆண்டு குறித்த கட்டடம் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்படாது காணப்பட்ட நிலையில் குறித்த கட்டடத் தினை வவுனியா கலைஞர்கள் திறந்து வைக்க வேண்டும் என கடந்து 3 மாதங்களுக்கு முன் அமைச்சரிடம் வைத்த கோரிக் கைக்கு அமைய குறித்த கட்டடம் திறந்து வைக்கப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் அமைச்சர் விதுர விக்ரமநாயக, வன்னி பாராளுமன்ற உறுப்பினர்கள் கே.கே.மஸ்தான், கு.திலீபன், வவுனியா மாவட்ட கலைஞர் கள் மற்றும் அரச அதிகாரிகள் எனப்பலரும் கலந்துகொண்டி ருந்தனர். (க-4-299)

# திறன் வகுப்பறைகளாக மாற்றம் பெற்ற கிளி.இராமகிருஸ்ண வித்தியாலயம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட கிளி/இராம கிருஸ்ண வித்தியாலயத்தில் அனைத்து வகுப்பறைகளும் திறன் வகுப்பறைகளாக மறு சீரமைக்கப்பட்டு திறன் பாடசா லையாக மாற்றம் பெற்றுள் ளது.

இதன்மூலம் கிளிநொச்சி மாவட்டத்தின் இரண்டாவது திறன் பாடசாலையாக கிளி/ இராம கிருஸ்ண வித்தியாலயம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. கடந்த 27 ஆம் திகதி நடைபெற்ற இந் நிகழ்வில் வடக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் செ.உதய குமார் பிரதம விருந்தினராக வும், கிளிநொச்சி தெற்கு கல்வி வலயக் கல்விப்பணிப்பாளர் கி.கமலராஜன் சிறப்பு விருந்தி னராகவும் கலந்து கொண்டு வகுப்பறையை திறந்து வைத் தனர். (க-4-104)

# கனிய மணல் அகழ்வு மன்னாரில் இடம்பெறாது

## பொறுப்பாளர் சாலிய தெரிவிப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் கனிய மணல் அகழ்வின் முதற் கட்ட செயற்பாடான கனிய மணல் பரிசோதனை நடவடிக் கைகளை உடனடியாக நிறுத் துமாறு கோரிக்கை முன்வைக் கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் குறிப்பாக தீவு பகுதியில் பல இடங்களில் கனிய மணல் அக ழ்வு நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது.

குறித்த அகழ்வு நடவடிக்கை குறித்து ஆராயும் விசேட கலந் துரையாடல் மன்னார் பிரஜை கள் குழுவின் ஏற்பாட்டில் நேற்று வெள்ளிக்கிழமை மன்னார் நகர சபையின் கேட்போர் கூடத் தில் இடம்பெற்றது.

இதன்போது கலந்து கொண் டவர்கள் ஒன்றிணைந்து மன் னார் மாவட்டத்தில் முன் னெடுக்கப்பட்டுவரும் கனிய மணல் பரிசோதனை நடவடிக் கைகளை உடனடியாக நிறுத் துமாறு கோரிக்கை முன்வைத் தனர்.

மன்னார் பிரஜைகள் குழு வின் ஏற்பாட்டில் இடம்பெற்ற குறித்த கலந்துரையாடலின் போது அவுஸ்திரேலியா கனிய மணல் அகழ்வு நிறுவனத்தின் இலங்கைக்கான பொறுப்பாளர் சாலிய கலந்து கொண்டிருந் தார்.

இதன்போது மன்னார் மாவ ட்டத்தில் கனிய மணல் அகழ்வு மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் மாவட்டத்தில் ஏற்பட வுள்ள அபாய நிலை குறித்து "மன்னாரின் சுற்றாடலை பாது காக்கும் அமைப்பினால் கருத்து க்கள் முன்வைக்கப்பட்டதோடு, மாவட்டத்தில் கனிய மணல் அகழ்வினால் எதிர்வரும் கால ங்களில் ஏற்படும் பாதிப்புகள் குறித்து முன்வைக்கப்பட் டது.

இதன்போது கருத்துத் தெரி வித்த அவுஸ்திரேலியா கனிய மணல் அகழ்வு நிறுவனத்தின் இலங்கைக்கான பொறுப்பாளர் சாலிய,

மக்களின் பாதுகாப்பிற்கு தீங்கை ஏற்படுத்துகின்ற வகை யில் குறித்த கனிய மணல் அகழ்வு இடம்பெறாது. உரிய சட்ட திட்டங்களுக்கு அமை வாகவே இடம்பெற்று வருகி ன்றது.

எனவே மக்கள் இதற்கு எதிர் ப்புத் தெரிவிக்கும் நிலையில் குறித்த அகழ்வுப் பணி இடம் பெறாது.

எனவே அகழ்வு நடவடி க்கைகளுக்காக கொண்டு வந்த இயந்திரங்களை எடுத்துக் கொண்டு உடனடியாக மன் னாரை விட்டு செல்கின்றோம் என தெரிவித்தார். (4-285)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 240 | 220 | 220 | 250 |
| உருளைக்கிழங்கு | 140 | 120 | 120 | 140 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 360 | 450 |
| தக்காளி | 280 | 240 | 240 | 350 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 80 | 90 | 80 |
| கோவா | 100 | 100 | 120 | 120 |
| கரட் | 250 | 350 | 380 | 120 |
| பூசணி | 140 | 140 | 140 | 140 |
| புடோல் | 250 | 200 | 180 | 180 |
| வாழைக்காய் | 60 | 70 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 180 | 100 | 100-300 | 200 |
| பெரிய வெங்காயம் | 160 | 120 | 120-170 | 180 |
| பாகற்காய் | 400 | 300 | 400 | 450 |
| வெண்டிக்காய் | 240 | 200 | 170 | 280 |
| கருணைக் கிழங்கு | 80 | 120 | 100 | 150 |
| பயற்றங்காய் | 400 | 350 | 250 | 300 |
| லீக்ஸ் | 160 | 100 | 170 | 240 |
| பீற்றூட் | 140 | 150 | 220 | 200 |
| கறிமிளகாய் | 300 | 300 | 350 | 250 |
| முருங்கைக்காய் | 1000 | 1200 | 1000 | 1400 |
| போஞ்சி | 260 | 200 | 140 | 400 |
| கத்தரிதம்புள்ள | 200 | 160 | -- | 230 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 100 | 80 |
| தேசிக்காய் | 140 | 120 | 140 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 75 | 40-80 | 60-80 |
| இராசவள்ளி | 250 | 150 | 180 | 200 |
| வெங்காயப்பூ | 180 | 120 | 150 | 240 |
| முள்ளங்கி | 50 | 100 | 80 | 120 |
| பொன்னாங்காணி | 60 | 80 | 80 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 30 | 40 |
| ஈரப்பலா | 80 | -- | 80 | -- |

# எரிபொருள் தட்டுப்பாடு எகிறியது கல், மணல் விலை

(நெளுக்குளம்)

நாட்டில் ஏற்பட்டுள்ள எரி பொருட்களுக்கான தட்டுப் பாட்டினால் டீசலில் இயங்கும் இயந்திரங்கள் பல நிறுத்தப் பட்டுள்ளன. இதனால் டிப்பர் வாகனங்களின் செயற்பாடு கள் அனைத்தும் மட்டுப்படுத்த ப்பட்டுள்ளதுடன் மணல், கிரவல், கல் என்பனவற்றின் விலைகள் திடீரென்று அதிகரித் துள்ளது.

நீண்ட வரிசையில் காத்தி ருந்து எரிபொருட்களை பெற்றுக் கொள்வதால் குறித்த நேரத்தி ற்குள் தமது வேலைகளை முடி த்துக்கொள்ள முடியவில்லை. நேர விரயத்தினால் குறிப்பிட்ட நேரத்திற்கு பொருட்களை கொண்டு சென்று வழங்க முடி யவில்லை என டிப்பர் சாரதிகள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் கல் உடைக்கும் இயந்திரங்கள், பைக்கோ இயந் திரங்கள் என்பன அனைத்தும் டீசல் இன்றி பெரும் நெருக் கடியை எதிர்நோக்கியுள்ளன.

சிலவேளைகளில் கல், மணல், கிரவல் ஏற்றிய வாகன ங்களுடன் வீதியில் டீசல் இன்றி நிறுத்தப்படும் நிலை ஏற்பட் டுள்ளது என தெரிய வருகின் றது. (க-4-299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவசாயிகளுக்கு தேவையான எரிபொருளை

# உடனடியாக வழங்குங்கள்

## விவசாய அமைச்சர் பணிப்பு

(கொழும்பு)

**எரிபொருள் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு தேவையான எரிபொருளை உடனடியாக வழங்குமாறு விவசாய அமைச்சர் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு பணிப்புரை விடுத்துள்ளார்.**

அநுராதபுரம், அம்பாறை, பொலநறுவை, குருநாகல், மொனராகலை உள்ளிட்ட மாவட்டங்களில் பெரும்போக நெல் அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, நெல் அறுவடை செய்யும் விவசாயிகள் எரிபொருளைப் பெறுவதில் சிரமங்களை எதிர்கொள்வதாக விவசாயிகள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

இந்த நிலையிலேயே, விவசாயிகளுக்கு எரிபொருளை உடனடியாக வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு விவசாய அமைச்சர் மகிந்தானந்த



அளுத்கமகே பணிப்புரை விடுத்துள்ளார். (நி)

# அலுமினியம், நிக்கல் விலை உச்சம்

(கொழும்பு)

உக்ரேய்ன் - ரஷ்யா போர் காரணமாக அலுமினியம் விலை அதிகரித்திருப்பதோடு நிக்கல் விலை 11 ஆண்டுகளில் இல்லாத அதிகரிப்பை நெருங்கியுள்ளது.

இந்த இரண்டு உலோகங்களினதும் பிரதான உற்பத்தியாளராக ரஷ்யா இருப்பதோடு, இவைகளின் சர்வதேச கையிருப்பும் வேகமாகக் குறைந்து வருகிறது.


உக்ரேய்ன் மீதான ரஷ்ய ஆக்கிரமிப்பால் சரக்குகள் சந்தைகளில் ஸ்தம்பித்துள்ளன.

புதிய தடைகள் பற்றிய அச்சுறுத்தல் காரணமாக பெரு நிறுவனங்கள் ரஷ்யாவில் இருந்து வெளியேறுவதோடு, கடன் வழங்குநர்கள் நிதி ஒப்பந்தங்களில் இருந்து பின்வாங்கி வருகின்றனர்.

இந்த நிலையில் கிட்டத்தட்ட பாதி அளவான உலக கொள்கலன் கப்பல்கள் ரஷ்யாவுக்கு செல்லவோ அங்கிருந்து புறப்படவோ இல்லை என்று கப்பல் நிறுவனங்களை மேற்கோள் காட்டி செய்தி வெளியாகியுள்ளது.

இதனால் அலுமினியம் விலை 2.4 வீதமும் நிக்கல் விலை 2.3 வீதமும் உயர்ந்துள்ளது. (நி)

# எரிபொருள் தட்டுப்பாடு , மின்தடை; எதிர்ப்பு தெரிவித்து போராட்டங்கள்



(மட்டக்களப்பு)

மின்சாரத் தடைக்கு எதிர்ப்புத் தெரிவித்து மெழுகுவர்த்தி, தீப்பந்தம் ஏந்திய போராட்டங்கள் நேற்று முன்தினம் வியாழக் கிழமை இரவு கொழும்பிலும் மட்டக்களப்பிலும் முன்னெடுக்கப்பட்டன.

தற்போது நாட்டில் பரவலாக பல மணிநேர மின்சாரத்தடை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற நிலையில் மக்களின் பாதிப்பை வெளிப்படுத்தும் வகையில் இந்த போராட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. (நி)

# வட்டி வீதத்தினை அதிகரித்த மத்திய வங்கி

(கொழும்பு)

நிலையான வைப்பு வசதி வீதம் மற்றும் நிலையான கடன் வசதி வீதத்தை அதிகரிக்க இலங்கை மத்திய வங்கி தீர்மானித்துள்ளது.

இதன்படி, நிலையான வைப்புத்தொகை வசதி 6.5 சதவீதமாகவும், நிலையான கடன் வசதி 7.5 சதவீதமாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார நடவடிக்கைகளில் தொடரும் தடைகளை கவனத்தில் கொண்டு நேற்று முன்தினம் நடைபெற்ற மத்திய வங்கியின் நாணய சபைக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (நி)

# இன்று ஒரு தகவல்

## புதுக்கலை ஒன்று பயில்வோம்

முன்பின் தெரியாத ஒரு பெண்ணிடம் பல் 32 ஐயும் காட்டிப் பேசும் ஒருவன், தன் மனைவியிடம் எவ்வளவு கடுமையாய் முகத்தை வைத்துக் கொள்கிறான்!

பெற்ற தந்தையை மதிக்காதவன் ஒரு காரியம் ஆக வேண்டும் என்பதற்காகத் தேவையற்ற மரியாதையை ஓர் அதிகாரிக்குக் கொடுக்கிறான்.

சொந்தப் பிள்ளையைக் கொஞ்சாதவன் வீட்டுக்காரர் தயவு வேண்டுமென்று அவர் பிள்ளையைக் கொஞ்சுகிறான்.

இவையெல்லாம் ஏன்?

எந்நாளும் உடனிருப்பவர்களுக்குக் கடுகடுப்பு; என்றோ பார்க்கிறவர்களுக்குப் புன்சிரிப்பு; இந்த முறையற்ற செயல்தான் ஒரு மனிதனை அமைதியற்ற மனிதனாக ஆக்குகிறது.

மனைவியைவிட முன்பின் தெரியாதவள் முக்கியமானவளாகி விட்டாளா? தந்தையைவிட ஒருநாள் உதவிடும் அதிகாரி உயர்வானவராகப் போய்விட்டாரா? பெற்ற பிள்ளையைவிட மாற்றான் பிள்ளை பெரிதா? இத்தகைய தவறான அணுகுமுறைகள் – போலியான நடைமுறைகள் எவ்வளவு ஆபத்தானவை என்பதை எவரும் உணருவதில்லை.

உங்களைச் சுற்றி நெருங்கியிருப்பவர்கள் எண்ணி வியக்கும் வண்ணம் உங்கள் இயல்பு எப்படிப்பட்டதாயினும் அதை மறந்து மிகுந்த அன்பும் பரிவும் பாசமும் காட்டுங்கள்.

மரியாதை காட்டப்பட வேண்டிய இடத்தில் அதைப் பன்மடங்காக்குங்கள். அதைக் காணும் அவர்கள் போக்கிலும் மாறுதல் ஏற்படும். வாழ்வில் அது ஒரு புதுத் திருப்பமாய் இருக்கும்.

அப்படியும் சிலர் மாறாதிருந்தால் அவர்களைப் பொறுத்த அளவில் நீங்கள் இயல்பாய் இருங்கள். இவர்கள் எதற்கும் மசியாத மரம் போன்றவர்கள்.

அதை விட்டு விட்டு,

அவர்களுக்கு எதிராக இறங்காதீர்கள், மேலும் குற்றம் கண்டு சுட்டிக்காட்டிக் கொண்டிருந்தாலோ –

அன்பை உள்ளடக்கி வைத்துக்கொண்டு வெளியே கோபத்தின் வடிவமாகச் செயற்பட்டுக் கொண்டிருந்தாலோ அவர்கள் விலகித்தான் போவார்கள்.

மனிதர் என்றால் இப்படித்தான் நடந்து கொள்ள வேண்டும் என்று நீங்களாக ஓர் அளவுகோலை நிர்ணயித்து வைத்துக் கொள்வதில் பயனில்லை. உங்கள் அளவுகோலுக்குள் எவருமே – உட்படமாட்டார்கள்.

நம்மால் பின்பற்றி நடக்க முடியாத வரையறைகளை மற்றவர்கள் பின்பற்ற வேண்டும் என எதிர்பார்ப்பது எவ்வகையில் நியாயம்?

தன்னை வெட்டிச் சாய்த்து வீழ்த்திய கோடாலியையும் மணக்கச் செய்யும் தன்மை சந்தன மரத்திற்கு உண்டு.

இத்தகைய பண்புதான் இறுதியில் வெல்லும்.

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலி மாமா கதைகள்

## வாழத் தெரிந்த எதிரிகள்



கொடியூரில் இரு பணக்காரர்கள் இருந்தனர். ஒருவர் வியாபாரி வையாபுரி. மற்றவர் விவசாயம் செய்யும் வைத்தியலிங்கம். வைத்தியலிங்கம் உடல் உழைப்பை நம்புபவர் என்றால் வையாபுரி பணபலத்தை நம்புபவர். இருவரும் அறிவில் ஒருவருக்கு மற்றவர் சளைத்தவர் அல்ல. ஆனால் ஒருவருக்கு மற்றவரைப் பிடிக்காது.

அக்கிராம வாசிகள்; இருவரும் சக்திவாய்ந்தவர்கள் என்று அவர்களிடம் பயப்பட்டு வந்தார்கள். ஆனால் பணக்காரர்கள் இருவரும் நாம் சொல்வதற்கே ஊரார் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்று தனித்தனியே எண்ணினார்கள்.

அந்தக் கிராமத்து அதிகாரி மயில்சாமி பெயரளவில் தான் கிராம அதிகாரி. எந்த முடிவையும் அவர் வையாபுரியையும் வைத்தியலிங்கத்தையும் கலந்து விட்டுத் தான் எடுப்பார். இருவர் அபிப்பிராயமும் ஒன்றாக இராவிட்டால் அந்த வேலையைச் செய்யவே மாட்டார்.

விவசாயத்தில் புது முறைகள் புகுத்தப்பட்டு விவசாயிகளுக்கு அரசாங்கம் உரத்தை விலைக்குக் கொடுக்க வேண்டும் என்று அந்நாட்டு மன்னர் முடிவு செய்தார். இந்த எரு விற்பனைக்கு கிராமங்களில் வியாபாரிகள் நியமிப்பது பற்றி முடிவு செய்ய மன்னர் கிராம அதிகாரியின் கூட்டம் ஒன்றை தலைநகரில் கூட்டினார்.

அதில் கலந்து கொண்டவர்கள் எல்லாரும் தம் ஊரில் வியாபாரிகளை நியமிக்கலாம் என்றார்கள். ஆனால் மயில்சாமி மட்டும் அதுபற்றி தன் கிராமத்து மக்களைக் கலந்து விட்டு முடிவு சொல்வதாகக் கூறினான். அது கேட்டு மன்னர் ஆச்சரியப்பட்டு "இது நல்ல திட்டம் தானே. இதற்கு ஏன் கிராமத்தவரைக் கலந்து ஆலோசிக்க வேண்டும்?" என்று கேட்டார்.

மயில்சாமியும் "அரசே! எங்கள் ஊரில் வையாபுரி, வைத்தியலிங்கம் என்று இரு பிரமுகர்கள் இருக்கிறார்கள். இந்த இரு பிரமுகர்களும் ஒருவர் செய்வதை மற்றவர் எதிர்ப்பவர். எனவே இருவரும் ஒத்துப் போகும்படி செய்தாலே என் ஊரில் உர விற்பனை செய்ய முடியும். அவர்கள் மகா புத்திசாலிகள், சட்டத்திற்குப் புறம்பாக எதையும் செய்ய மாட்டார்கள்" என்றார்.

மன்னர் எல்லா கிராம அதிகாரிகளையும் அனுப்பி விட்டு மயில்சாமியை மட்டும் இருக்கச் சொன்னார். அப்போது அமைச்சர் அங்கு வந்து மன்னரிடம் "அரசே! நம் அண்டை நாட்டு மன்னன் மாதவ சேனன் மக்களைத் துன்புறுத்துகிறான்.

மக்கள் அவனை வெறுக்கிறார்கள் என நம் ஒற்றர்கள் கூறுகிறார்கள். அந்நாட்டை நாம் கைப்பற்ற இதுவே தக்க சமயம்" என்றார். மன்னரும் "சரி. நமது கீழண்டை மன்னன் சந்திரசேனன் பலமிக்கவனாயிற்றே.

(தொடரும்)

# கம்பராமாயணம்

## அயோத்தியா காண்டம்




**திருப்புமுனை**

இராமனுடைய மணக்கோலத்தைக் கண்டு மகிழ்ந்த தசரதன் அவனை ஆட்சியில் அமர்த்தி, மணி முடி தரித்த அரசு கோலத்தில் காண விழைந்தான். அதற்குக் காரணம் என்ன? இராமன் தக்க பருவத்தை அடைந்தான் என்பது அன்று; தசரதன் முதுமையின் நுழைவாயிலில் கால் அடி எடுத்து வைத்தான் என்பதுதான். தன் தோள் சுமையை மாற்று ஆள் மீது ஏற்ற நினைத்தான்.

நரைமுடி ஒன்று அவனுக்குத் தன் முதுமையை அறிவித்தது; தான் இனி வாழ்க்கையில் கரை ஏற வேண்டும் என்று நினைத்தான். நிலைக்கண்ணாடி முன் புதிய நினைவு தோன்றிது. பெருநிலக் காவலனின் கறுத்து இருந்த மயிர் முடி ஒன்று வாழ்க்கையை வெறுத்து வெளுத்துக் காட்டியது; அவன் செவியில் வந்து மோதியது; அவன் மூப்பைப் பற்றி ஓதியது.

"உனக்கு வயது ஆகிவிட்டது; இனி வாய்ப்புத் தர முடியாது; ஆட்சியை மாற்று; காளைப் பருவத்து ஆளை உன் மகனாய்ப் பெற்றிருக்கிறாய்; நாளையே அவனுக்கு மணிமுடி சூட்டு; நீ காட்டுக்கு நடந்து காட்டு; இம்மைக்கு வேண்டுவன தேடிக் கொண்டாய்; மறுமை வெறுமையாய்க் கிடக்கிறது. தவம் செய்க; வாழ் நாளை அவம் ஆக்காதே; இளமைக்கு அழகு இன்புற்று இருத்தல்; முதுமைக்கு ஆக்கம் அறிவு மிக்க நோக்கம்; இங்கே இருந்தால் ஏற்படும் தேக்கம்; [illegible] த்தில் ஊக்கம்" என்று அறிவுறுத்தியது. "காடு வா வா என்கிறது; வீடு போபோ என்கிறது" என்னும் நிலையைத் தசரதன் அடைந்தான். அறிவுடை அமைச்சர் இருந்தனர்; செறிவு மிக்க வேள்வியர் இருந்தனர்; அவர்கள் எடுத்து உரைக்காத அறிவுரையை ஒரு மயிர் முடி தோற்றுவித்தது. அது வரலாற்றுத் திருப்பத்துக்குத் துணை செய்தது; "மாட்சிமிக்க இராவணன் வீழ்ச்சி அடைதற்கு உரிய காலம் வந்துவிட்டது" என்று அறிவிக்கும் முன்னறிவிப்புக் காட்சியாக இது விளங்கியது. அவன் ஆற்றிய தீவினைகள் இந்நரை முடி வடிவத்தில் வெளுத்து வந்து, அவனைக் கொல்லுமாறு செயற்பட்டது.

**தசரதன் மனமாற்றம்**

தசரதன் அமைச்சர் அவையைக் கூட்டினான்; வசிட்டரை அழைப்பித்தான்; ஆன்று அவிந்து அடங்கிய சான்றோரை அழைத்தான்; அரசியல் சட்டம் அறிந்தவர் அமைச்சர், சாத்திர சம்பிரதாயங்கள் அறிந்தவர் குல குரு வசிட்டர். எந்த முடிவையும் தானே துணிந்து எடுக்கத் தசரதன் விரும்பவில்லை; வீட்டுப் பிரச்சினையாக இருந்தால் தம் மனைவியரைக் கேட்டுச் செய்யலாம்; இதனால், ஏற்படுகின்ற பாதிப்பு நாட்டு மக்களைச் சாரும்; அதனால் அமைச்சர் அவை கூட்டி ஆலோசனை நடத்தினான்.

தசரதன் அமைச்சர் எத்தகையவர்? வள்ளுவர் காட்டும் அமைச்சியல் நன்கு அறிந்தவர்; அரசியல் நுட்பம் உணர்ந்தவர்; விலை கொடுத்து வாங்க முடியாத மனநிலை பெற்றவர்கள்.

**அமைச்சர் இயல்புகள்**

தசரதன் அமைச்சர் குலத் தொன்மையும், கலைச் செல்வமும், கேள்வி ஞானமும், நடு நிலைமையும் உடையவராய் விளங்கினார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணன் என்னடா, தம்பி என்னடா
அவசரமான உலகத்திலே!
~ கவிஞர் கண்ணதாசன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஜனாதிபதி கோட்டாவின் ஆட்சியில் கறிவேப்பிலைக் கலாசாரம்

உதய கம்மன்பில மற்றும் விமல் வீரவன்ஸ ஆகியோரின் அமைச்சுப் பதவிகள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் பறிக்கப்பட்டுள்ளன.

ஏலவே சுசில் பிரேமஜயந்தவின் அமைச்சுப் பதவி பறிக்கப்பட்டிருந்தமை தெரிந்ததே.

சுசில் பிரேமஜயந்தவின் அமைச்சுப் பதவி பறிக்கப்பட்டதும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ சுசில் பிரேமஜயந்தவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு உரையாடியிருந்தார்.

கோட்டாபய ராஜபக்ஷவால் அமைச்சுப் பதவி நீக்கப்பட்ட ஒருவருடன் பிரதமர் மகிந்த தொலைபேசியில் தொடர்புகொண்டு கதைப்பதென்பது ஒன்றுக்குமேற்பட்ட பொருள்கோடலைத் தரக்கூடியது.

அதாவது, உங்களின் அமைச்சுப் பதவியை நீக்கியது தவறு. அதற்காக நான் மனம் வருந்துகிறேன். என்ன செய்வது ஆட்சி அதிகாரமும் அமைச்சர்களைப் பதவி நீக்குகின்ற அதிகாரமும் ஜனாதிபதி கோட்டாவிடம் இருப்பதால், நான் எதுவும் செய்ய முடியவில்லை என்பதாக அந்தத் தொலைபேசி உரையாடல் இருந்திருக்கும் என்று அனுமானிப்பதில் தவறில்லை.

எதுவாயினும் அமைச்சுப் பதவி பறிக்கப்பட்ட சுசில் பிரேமஜயந்தவுடன் பிரதமர் மகிந்த தொலைபேசியில் உரையாடியமை ஜனாதிபதி கோட்டாவுக்குக் கடுப்பை ஏற்படுத்தவே செய்திருக்கும்.

பரவாயில்லை. சுசிலுடன் நிலைமை சுமுகமாகிவிட்டதென்றால், அதுதான் இல்லை. இப்போது மின்சக்தி அமைச்சர் உதய கம்மன்பில மற்றும் கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவன்ஸ ஆகியோரின் அமைச்சுப் பதவிகளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அதிரடியாகப் பறித்துள்ளார்.

இந்த அதிரடி தென்னிலங்கை அரசியலில் பேசுபடுபொருளாயிற்று. அமைச்சராக இருந்த விமல் வீரவன்ஸ மகிந்த ராஜபக்ஷவின் வலது கரம் என்றுகூறத்தக்கவர்.

மகிந்த ராஜபக்ஷ பிரதமராக, ஜனாதிபதியாக இருந்தபோதெல்லாம் விமல் வீரவன்ஸ அவரின் நிழலாகப் பின்தொடர்ந்தார்.

இதுபோல உதய கம்மன்பிலவும் மகிந்த ராஜபக்ஷவின் தீவிர விசுவாசி.

நிலைமை இதுவாக இருக்கையில், மேற்குறிப்பிட்ட விமல் மற்றும் உதய கம்மன்பில ஆகியோரின் அமைச்சுப் பதவிகளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அதிரடியாக பறித்துள்ளார் எனில்,

அதுபற்றி, பிரதமராக இருக்கக்கூடிய அண்ணன் மகிந்தவிடம் ஜனாதிபதி கோட்டாபய கதைக்கவுமில்லை. ஆராயவுமில்லை என்பது புரிதற்குரியது.

தவிர, மகிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்களை அமைச்சுப் பதவிகளில் இருந்து நீக்குகின்ற நடவடிக்கை தீவிரமாக்கப்பட்டுள்ளதோ என்று ஊகிப்பதிலும் குற்றமில்லை.

எது எவ்வாறாயினும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷவும் எடுத்துள்ள அரசியல் மறுசீரமைப்பு, பிரதமர் மகிந்த ராஜபக்ஷவையும் அவரது குடும்பத்தையும் கடுமையாகப் பாதிக்கும் என்பதை மட்டுமே இப்போதைக்குக் கூற முடியும்.

இதற்கும் மேலாக, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சியில் கறிவேப்பிலை கலாசாரத்துக்குப் பஞ்சம் இருக்கப் போவதில்லை என்பதையும் அறுதியிட்டுக் கூறமுடியும்.

# தோல்வியை மறைத்து மக்களின் கவனத்தை திசை திருப்ப அரசாங்கம் முயற்சி

## ஐக்கிய தேசியக் கட்சி விசனம்

(கொழும்பு)

அரசாங்கம் அதன் தோல்வியை மறைப்பதற்காக, மக்களின் கவனத்தை திசை திருப்புவதற்கு முயற்சிக்கிறது. அமைச்சர்கள் இருவரை பதவி நீக்கினால் நாட்டிலுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு கிட்டும் என்று மக்கள் நம்புவார்கள் என அரசாங்கம் எண்ணுவதாக ஐக்கிய தேசிய கட்சி விசனம் தெரிவித்துள்ளது.

கட்சி செயற்பாட்டாளர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் ஐ.தே.க. பிரதி தலைவர் ருவன் விஜேவர்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கம் அதன் தோல்வியை மக்களிடம் மறைக்க முயற்சிக்கிறது. நாட்டில் நிலவும் நெருக்கடி நிலைமைகளுக்கு மத்தியில் மக்களின் கவனத்தை திசை திருப்புவதற்காக அரசாங்கம் முன்னெடுத்துள்ள முயற்சிகளுக்கு ஐக்கிய தேசிய கட்சி அதன் விசனத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குவதில் அரசாங்கம் தோல்வியடைந்துள்ளது. அரசாங்கம் மக்களை முட்டாள்களாகவே நோக்குகின்றது. அமைச்சர்கள் இருவரை பதவி நீக்கினால் நாட்டிலுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைத்துவிடும் என்று மக்கள் நம்புவார்கள் என்று அரசாங்கம் எண்ணிக் கொண்டிருக்கிறது.

இது எமது கவனத்தை திசை திருப்புவதற்காக முன்னெடுக்கப்பட்டுள்ள முயற்சியாகும். நாட்டில் நிலவுகின்ற டொலர் நெருக்கடிக்கு அமைச்சரவையில் திருத்தங்களை மேற்கொள்வது பொருத்தமானதல்ல. மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்ற நிலையில் அவற்றை தீர்ப்பதற்கு அரசாங்கம் எவ்வித முயற்சிகளையும் முன்னெடுப்பதாக தெரியவில்லை.

முதலாவதாக பால்மா தட்டுப்பாடு, அதனைத் தொடர்ந்து சீமெந்து தட்டுப்பாடு, தொடர்ந்து சமையல் எரிவாயு, எரிபொருள் என்பவற்றோடு தற்போது நாளொன்றுக்கு 7 மணித்தியால மின் துண்டிப்பும் நடைமுறைப்படுத்தப்படுகிறது என்றார். (ம)

## நாட்டில் நேற்று மேலும் + 583 பேருக்கு தொற்று

(கொழும்பு)

நாட்டில்நேற்று மேலும் 583 பேருக்கு கோவிட்-19 தொற்று உறுதியாகியுள்ளது.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கொவிட்-19 தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 648,993 ஆக அதிகரித்துள்ளது. (ம)

## இரத்ததான முகாம்

சுன்னாகம் சிவன் கழகத்தினரும் சிவன் தொண்டர்களும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இரத்ததான முகாம் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் பிற்பகல் 2.30 மணிவரை சுன்னாகம் கதிரமலைச் சிவன் ஆலய மணிமண்டபத்தில் இடம்பெறும்.

மேற்படி இரத்ததான முகாம் நிகழ்வில் அனைத்துக் குருதிக் கொடையாளர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு இரத்ததான முகாம் நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.(4,6,18)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை 06 ஆம் திகதி காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை

**யாழ். பிரதேசத்தில்** அன்னை கடல் உணவு நாவாந்துறை, செல்வமஹால் திருமண மண்டபம், கொக்குவில் சந்தி, நாவலர் வீதி காரைநகர் வீதி சந்தி, பூநாறி சந்தி, சிவப்பிரகாசம் வீதி, வில்லூன்றி, பிரிட்டிஷ் கவுன்சில், பிரதிப் பொது முகாமையாளர் அலுவலகம் - மின்சாரசபை, ஆளுநர் விடுதி, யாழ் மாவட்ட செயலகம், விஞ்ஞானபீடம், தியாகி அறக்கொடை நிலையம், துளசி மஹால், யு.எஸ் விடுதி, றியோ கிரீம் ஹவுஸ், அரசடி பழம் வீதி, மருத்துவமனை வீதி, கச்சேரி நல்லூர் வீதி சந்தி, கைலாசபிள்ளையார் கோவில், முலவை, நல்லூர் கோயில், நாவலர் வீதி இராசாவின் தோட்டம், பருத்தித்துறை வீதி, ரக்கா வீதி சுண்டிக்குளி, கோயில் வீதி, இராமநாதன் வீதி புகையிரத குறுக்குசந்தி, டெலிகாம் சுன்னாகம், ஏழாலை, கட்டுவன், கட்டுவன்புலம், குப்பிளான், மயிலங்காடு, சூறாவத்தை சுன்னாகம், புகையிரத நிலைய வீதி மணியம் கடையடி, தோப்பு ஏழாலை, மருத்துவீட அரங்கம், பொக்ஸ்ரெஸ்ட் (பிறைவேட்) லிமிடெட், மருத்துவபீடம், அச்சுகூடம் கே.கே.எஸ் வீதி, ஆறுகால்மடம், ஞானபண்டிதா பாடசாலை, கொக்குவில், மாவடி திருநெல்வேலி, நந்தாவில், சுகந்த் இன்டர்நெஷனல் காக்கைதீவு, பிரம்படி கொக்குவில், சைலோ கோயில் வீதி, கைதடி மாகாண சபை, சித்த மருத்துவம் -கைதடி, யுனைற்றட் மோட்டார்ஸ்-நுணாவில், நாராயனாவன் பொருள், அறுகு வெளி, அரசு உணவு களஞ்சியம், நாவற்குழி, கைதடி மானிப்பாய் வீதி (கலைவாணி), கைதடி, நவபுரம், கைதடி பனை ஆராய்ச்சி நிறுவனம், கைதடி மானிப்பாய் வீதி கோப்பாய் வரை, கள்ளி நகர்; கோகிலாகண்டி மங்களா பட்டறை, கோகிலாகண்டித்துறை, மட்டுவில், நாவற்குழி லிங்கூஷ் ரெடிமிக்ஸ், வாகையடி, மறவன்புலவு, மறவன் புலவு கேரைதீவு வீதி, கேரைதீவு வீதி, முதியோர் இல்லத்தடி கைதடி -A9 வீதி, நாவற்கழி சங்கன் கட்டுமானம், தச்சத்தோப்பு கேரைதீவு வீதி தனங்கிளப்பு ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்



### மனம் என்ற கடிவாளம்

❖ புலன்களே குதிரைகள், மனம்-கடிவாளம், புத்தி-சாரதி, உடல்-தேர், இவற்றின் தலைவனான மன்னனான ஆன்மா தேரில் வீற்றிருக்கிறான்.

❖ குதிரைகள் வலிமை மிக்கதாக, கடிவாளத்திற்கு அடங்காதவையாக இருந்து, சாரதியான புத்திக்கு அவற்றை அடக்க முடியாமலும் போகுமானால் தேர் ஆபத்திற்கு உள்ளாகும். மாறாகப் புலன்களாகிய குதிரைகளை மனமாகிய கடிவாளத்தால் புத்தி என்ற சாரதி திறம்பட அடக்கி நடத்தினால் தேர் இலக்கை அடைகிறது.

❖ எனவே, இந்த தவம் என்பது என்ன? உடலையும் புலன்களையும் வழிநடத்தும் போது மனம் என்ற கடிவாளத்தை உறுதியாகப் பிடித்து அவை இரண்டும் தாம் விரும்பும்படி செல்ல விடாமல் தடுத்து வைப்பது தவம் ஆகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலப்பு தேர்தல் முறையில் மாகாண சபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணய அறிக்கை-ஒரு பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 11

**புதிய மாகாண சபைத் தேர்தல் முறைமைக்கமைய மக்கள் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படும் செயன்முறை.**

(அ) மாகாணத்தின் நிர்வாக மாவட்டங்களின் தொகுதிகளுக்காகப் போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் பெயர்ப் பட்டியல் மற்றும் மாவட்டம் சார்பாக போட்டியிடுவதற்கு பெயர் குறிக்கப்படுகின்ற வேட்பாளர்களின் பெயர்களை உள்ளடக்கிய மாவட்டப் பெயர்ப் பட்டியல் என்ற வகையிலான இரண்டு பெயர்ப் பட்டியல்கள் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களினால் வேட்புமனுத் தாக்கலின் போது சமர்ப்பிக்கப்படும்.

(ஆ) வேட்புமனுப் பத்திரங்களில் உள்ளடக்கப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கையில் 25% த்தினர் பெண்களாக இருக்க வேண்டுமென்ற தேவைப்பாடு காணப்படுகின்றது.

(இவ்வாறு வேட்புமனுப் பத்திரமொன்றில் உள்ளடக்கப்பட வேண்டிய பெண் வேட்பாளர்களின் எண்ணிக்கை தொடர்பாக முன்கூட்டியே தேர்தல்கள் ஆணைக் குழுவினால் அறிவூட்டப்படும்).

(இ) வாக்காளர், வாக்குச் சீட்டில், தேர்தல் தொகுதிக்காக வேட்பாளர்கள் முன்வைக்கின்ற கட்சிக்கு அல்லது குழுவுக்கு வாக்கினை அடையாளமிடல் வேண்டும்.

(ஈ) ஒவ்வொரு தேர்தல் தொகுதியின் கீழும் போட்டிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள வேட்பாளர்களின் பெயர்களை வாக்காளர் தெரிந்து கொள்வதற்காக வேட்பாளர்களின் பெயர்ப் பட்டியல்கள் வாக்களிப்பு நிலைய வளவிற்குள் தெரிவத்தாட்சி அலுவலரினால் காட்சிப்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

இதற்கு மேலதிகமாக சட்டத்தில் குறிப்பிடப்படாத போதிலும் தேர்தல்களின் போது மேற்கொள்ளப்படுகின்றவாறு வாக்காளர்களின் இவ் விபரங்களுடன் கூடிய அறிவித்தலொன்று உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் தபால் மூலம் அனுப்பப்படுவதற்கான சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன.

(உ) அத்தொகுதியொன்றின் கீழ் போட்டியிடுகின்ற கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களில் அதிக வாக்குகளைப் பெற்றுக் கொள்கின்ற தரப்பினை (கட்சி/குழு) பிரதிநிதித்துவப்படுத்துகின்ற வேட்பாளர் தொகுதியின் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்.

(ஊ) கட்சிகள் மற்றும் குழுக்கள், தேர்தலின்போது மாவட்டத்தில் பெற்றுக் கொண்டுள்ள மொத்த செல்லுபடியான வாக்குகளை நிர்வாக மாவட்டம் சார்பாக தேர்ந்தெடுக்கப்படவுள்ள மொத்த உறுப்பினரின் எண்ணிக்கையினால் (தொகுதிவாரியாகவும் மாவட்ட அடிப்படையிலும்) வகுப்பதன் மூலம் ஒரு பிரதிநிதியைத் தேர்ந்தெடுப்பதற்காக ஏதேனுமொரு கட்சி அல்லது குழு உரித்துப் பெறுவதற்காகப் பெற்றுக் கொள்ள வேண்டிய வாக்குகளின் எண்ணிக்கை (விளை தொகை) கணிப்பிடப்படும்.

(எ) ஒவ்வொரு கட்சிக்கும்/குழுவுக்கும் உரித்தாகின்ற ஆசனங்களின் எண்ணிக்கை கட்சிகள்/குழுக்கள் பெற்றுக் கொள்கின்ற வாக்குகளின் எண்ணிக்கையை விளைதொகையால் வகுத்து வெவ்வேறாகக் கண்டறியப்படுதல் வாக்கெண்ணலின் அடுத்த கட்டமாகும்.

(ஏ) ஏதேனுமொரு கட்சி அல்லது குழு அக்கட்சியின் வாக்குகளின் எண்ணிக்கையை விளை தொகையினால் வகுத்ததன் பின்னர் பெற்றுக்கொள்கின்ற "உறுப்புரிமையிலும் "பார்க்க அதிக உறுப்புரிமைகளை தொகுதி மட்டத்தில் போட்டியிட்டுப் பெற்றுக்கொள்ளுமாயின், அத்தகைய கட்சிக்கு அல்லது குழுவுக்கு மாவட்டப் பட்டியலிலிருந்து உறுப்பினர்களைத் தேர்தெடுக்கும் உரித்துக் கிடையாது.

எனினும் இவ்வாறு கணிப்பிடுகின்றபோது ஏதேனும் ஒரு கட்சிக்கு அல்லது குழுவுக்கு உறுப்புரிமையின் எண்ணிக்கையிலும் பார்க்க குறைந்த எண்ணிக்கையிலான உறுப்பினர்கள் அக்கட்சியை அல்லது குழுவை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற உறுப்பினர்களாக தொகுதிகளின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவிடத்து எஞ்சியுள்ள உறுப்பினர்களை தமது மாவட்ட வேட்பாளர்களின் பெயர்ப் பட்டியலிலுள்ள வேட்பாளர்களிலிருந்து பெயர் குறிப்பதற்கு அக்கட்சிக்கு/குழுவுக்கு அவகாசம் உண்டு.

**மக்கள் கருத்தறிதலும் செயல் அமர்வுகளும்**

இவ்வெல்லை நிர்ணய செயல் முறை தொடர்பாக அரசியல் கட்சிகள், பொதுமக்கள் அமைப்புக்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரை அறிவூட்டி அதற்கான முன்மொழிவுகளைப் பெற்றுக்கொள்வதற்கான அறிவித்தலொன்று 2017.10.13 ஆம் திகதி செய்திப் பத்திரிகைகளின் மூலம் பகிரங்கப்படுத்தப்பட்டதோடு, உரிய முன்மொழிவுகள் 2017.11.02 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கப்பெற வேண்டுமென அவ்வறிவித்தலூடாக உரிய தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டது.

அதற்கு மேலதிகமாக பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் செயலாளர்களுக்கும் மாகாண சபைப் பிரதிநிதிகளுக்கும் உரிய முன்மொழிவுகளை சமர்ப்பிக்குமாறும் அழைப்பு விடுக்கப்பட்டது.

பொதுமக்களிடமிருந்து வாய்மொழி மூல விடய முன்வைப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்கு 2017.11.09 ஆம் திகதி முதல் 2017.12.08 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் 25 மாவட்டங்களுக்குள் ஒரு சபை அமர்வு வீதம் சபை அமர்வுகள் நடத்தப்பட்டன. இவற்றை அடிப்படையக் கொண்டு மாவட்ட ரீதியில் தேர்தல் தொகுதிகள் எல்லை நிர்ணயம் செய்யப்பட்டன.

> **எல்லை நிர்ணய செயல்முறை தொடர்பாக அரசியல் கட்சிகள், பொதுமக்கள் அமைப்புக்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரை அறிவூட்டி அதற்கான முன்மொழிவுகளைப் பெற்றுக்கொள்வதற்கான அறிவித்தலொன்று பத்திரிகைகளின் மூலம் பகிரங்கப் படுத்தப்பட்டதோடு, அதற்கு மேலதிகமாக பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் செயலாளர்களுக்கும் மாகாண சபைப் பிரதிநிதிகளுக்கும் உரிய முன்மொழிவுகளை சமர்ப்பிக்குமாறும் எல்லை நிர்ணயக் குழுவால் அழைப்பு விடுக்கப்பட்டது.**

> **பொதுமக்களிடமிருந்து வாய்மொழி மூல விடய முன்வைப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்கு 25 மாவட்டங்களிலும் ஒரு சபை அமர்வு வீதம் சபை அமர்வுகள் நடத்தப்பட்டன. இவற்றை அடிப்படையக் கொண்டு மாவட்ட ரீதியில் தேர்தல் தொகுதிகள் எல்லை நிர்ணயம்செய்யப்பட்டன.**

**மேல் மாகாணம் பற்றிய தகவல்**

இலங்கையில் மாகாணங்கள் 19 ஆம் நூற்றாண்டு முதலே நிர்வாக அலகுகளாக இருந்து வந்த போதும், 1987 இல் இலங்கை யாப்பின் பதின்மூன்றாவது திருத்தம் கொண்டு வரப்பட்ட போதே இவற்றுக்கு சட்ட பூர்வமான அந்தஸ்து கிடைத்தது. இதன்மூலம் மாகாண சபைகள் அமைக்கப்பட்டன. எல்லை நிர்ணய குழுவின் அறிக்கையில் மேல் மாகாணம் பற்றி பின்வரும் தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

இலங்கையின் தென்மேற்குப் பகுதியில் அமையப் பெற்றுள்ள மேல்மாகாணத்தின் மொத்த நிலப் பரப்பான 3,684 சதுர கிலோ மீற்றரில், 699 சதுர கிலோமீற்றர் கொழும்பு மாவட்டத்திற்கும்,1,387 சதுர கிலோமீற்றர் கம்பஹா மாவட்டத்திற்கும், 1,598 சதுர கிலோ மீற்றர் களுத்துறை மாவட்டத்திற்கும் உட்பட்டதாகும். நாட்டின் மிகச்சிறிய மாகாணம் மேல் மாகாணமாகும்.

அது நாட்டின் மொத்தப்பரப்பில் 5.6 சதவீதமாகும். 3,593 சதுர கிலோமீற்றர் தரைப் பிரதேசத்தையும்,91 சதுர கிலோமீற்றர் உள்ளக நீர்ப்பரப்பு பகுதியையும் கொண்டதாகும். மாகாணத்தின் மொத்தப்பரப்பில் 2.5 சதவீதம் உள்ளக நீரேந்தும் பகுதிகளாகும். மேல் மாகாணத்திற்கு வடக்கே வட மேல்மாகாணத்தையும், தெற்கே தென்மாகாணத்தையும், கிழக்கே சப்ரகமுவ மாகாணத்தையும் மற்றும் மேற்கே கடலையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது.

2010 ஆம் ஆண்டில் மாகாணத்தின் மொத்தப்பரப்பில் 5.9 சதவீதம் அதாவது. 218 சதுர கிலோ மீற்றர் வனப்பகுதியாகக் காணப்பட்டது. 2016 ஆம் ஆண்டில் பெருந் தெருக்களின் நீளம் 3,649 கிலோ மீற்றராகக் காணப்பட்டது. இலங்கையின் வர்த்தக தலைநகரான கொழும்பு மற்றும் சட்டபூர்வ தலைநகரான ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை என்பன மேல் மாகாணத்திலேயே அமையப் பெற்றுள்ளன.

இலங்கையின் பொருளாதாரத்திற்கு 2015 ஆம் ஆண்டில் 41 சதவீதமான பங்களிப்பு மேல் மாகாணத்திலிருந்து கிடைக்கப்பெற்றுள்ளது. அதில் 41% சேவைகள் பிரிவிலிருந்தும், 50% கைத்தொழில் பிரிவிலிருந்தும், 9% விவசாயப்பிரிவிலிருந்தும் என்றவாறு கிடைக்கப் பெற்றுள்ளது. மேல் மாகாணத்தின் பொருளாதார வருமானம் முக்கியமாக சேவைத் துறையில் இருந்தும் (61 %) அதைத் தொடர்ந்து கைத்தொழிற் துறையில் இருந்தும் (37%) மிகுதி விவசாயத் துறையில் இருந்தும் (2%) கிடைக்கப் பெறுகின்றன.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழில் இளை...

உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவமானது நேற்றுப் பிற்பகல் 1.45 மணியளவில் கோவில் வீதிக்கு அருகேயுள்ள ரயில் தண்டவாளத்தில் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர், மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு ரயிலில் பாய்ந்து உயிரை மாய்த்துள்ளார்.

இதில் அரியாலையைச் சேர்ந்த பரமேஸ்வரன் இலக்சன் (வயது - 25) என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (ம-18,33,104,105)

## முல்லையில்...

நேற்று மதியம் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மாங்குளம் கற்குவாரிப் பகுதியில் வசித்து வரும் 22 வயதுடைய திருச்செல்வம் நிதர்சனா என்ற இளம் யுவதியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வவுனியா ஆடைத்தொழிற்சாலை ஒன்றில் பணியாற்றிவரும் யுவதி உடல் நிலை சரியில்லாத காரணத்தினால் சிறிது காலம் வீட்டில் வாழ்ந்த நிலையில் வீட்டில் இருந்து அம்மம்மா வீட்டிற்கு சென்று வருவதாக சொல்லிவிட்டு சென்ற நிலையில் யுவதி புகையிரதத்தில் மோதி உயிரிழந்துள்ளார். (ம-281)

## சனி, ஞாயிறு...

மாலை 6 மணிமுதல் இரவு 10 மணி வரையில் 1 மணி நேரமும் மின்வெட்டு அமுலில் இருக்கும்.

இதேவேளை, இரண்டு வலயங்களில் காலை 8.30 மணிமுதல் 4.30 மணி வரையிலும் 4 மணிநேரமும் மாலை 4.30 மணிமுதல் இரவு 10.30 மணி வரையில் 3 மணிநேரமும் மின்வெட்டு அமுல்படுத்தப்படும்.

நாளை ஞாயிறுக்கிழமை காலை 9 மணிமுதல் மாலை 4.30 மணிவரையில் இரண்டு மணிநேரம் 30 நிமிடங்கள் மூன்று வலயங்களில் மின்வெட்டு அமுல்படுத்தப்படும் என்றும் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு அறிவித்துள்ளது. (ம)

## மின்சாரம்...

முறையை கடைப்பிடிப்பதை உறுதி செய்ய சில நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று மத்திய வங்கி பரிந்துரைத்தது.

அத்தியாவசியமற்ற மற்றும் அவசரமற்ற இறக்குமதிகளை அவசரமாகத் தடுக்கும் நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துதல், வெளிநாட்டுப் பணம் அனுப்புதல் மற்றும் முதலீடுகளை மேலும் ஊக்குவித்தல் மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றலை நோக்கிய நகர்வை விரைவுபடுத்தும் அதே வேளையில் எரிசக்தி பாதுகாப்பு நடவடிக்கைகளை செயல்படுத்துதல் ஆகியவையும் அரசாங்கத்திற்கான பரிந்துரைகளில் அடங்கும்.

மத்திய வங்கி நாணயக் கொள்கை நிலைப்பாட்டை மேலும் கடுமையாக்கிய போது இந்தப் பரிந்துரைகள் செய்யப்பட்டன. (ம)

## விமல் வீரவன்ஸ...

மக்கள் சக்தி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்ததாக மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார். (ம)

## இரத்தக்கறை...

முடியாத நிலையில் நபர் ஒருவரின் சடலம் காயங்களுடன் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சடலம் அருகே ஓர் மோட்டார் சைக்கிளும் காணப்பட்டது.

இந்த மரணம் விபத்தா? அல்லது சதி வேலையா? என இளவாலைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-18,33,104)

## மனச்சாட்சியே...

உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

அமைச்சுப் பதவி என்பது நிரந்தரமற்ற தொன்றென நான் இதற்கு முன்னரே குறிப்பிட்டுள்ளேன்.

பதவிகள் வரும்போகும். ஆனால், மனச்சாட்சி அப்படி அல்ல. மனச்சாட்சியின் பிரகாரமே நாம் செயற்பட்டுள்ளோம் என தெரிவித்துள்ளார்,

எல்லா விடயங்களையும் வெளிப்படுத்தினோம். ஆனால், நாம் எங்கும் பொய்யுரைக்கவில்லை. உண்மையை கூறினால் வலிப்பவர்கள்தான் எம்மை விரட்டியுள்ளனர்.

நாம் மக்களின் மடியில்தான் விழுவோம், மக்களுடன் இணைந்து தாய் நாட்டுக்காகப் போராடுவோம். அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பில் இன்று முடிவெடுக்கப்படும் என்றார். (ம)

## ராஜபக்ஷ அரசு...

பொதுஜன பெரமுன அரசில் அங்கம் வகித்த பங்காளிக் கட்சிகளின் முக்கிய அமைச்சுப் பொறுப்புக்களை வகித்த வாசுதேவ நாணயக்கார, விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில உள்ளிட்ட பலர் இணைந்து நேற்று விசேட ஊடகவியலாளர் மாநா[illegible] குள் இருந்த ப[illegible] படுத்தினர்.

கொழும்பிலுள்ள சினமன்கிராண்ட் ஹோட்டலில் இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே வாசுதேவ நாணயக்கார, விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோர் பல உண்மைகளை வெளிப்படுத்தினர்.

அவற்றின் தொகுப்பு வருமாறு,

- நிதியமைச்சர் பஷிலின் 2019ஆம் ஆண்டு ஜனாதிபதி வேட்பாளர் கனவு எம்மால் இல்லாமல் போனதால் அவருக்கும் பங்காளி கட்சிகளுக்குமிடையில் முரண்பாடு தீவிரமடைந்ததாக விமல் வீரவன்ஸ குறிப்பிட்டார்.
- குடும்பத்தாரின் அழுத்தங்களினால் ஜனாதிபதி எம்மை பதவி நீக்கினார் என்றும் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.
- நிதியமைச்சரின் கைப்பொம்மையாக ஜனாதிபதி செயற்படுகின்றார் என்று வெளிப்படையாக விமல் வீரவன்ஸ கருத்துரைத்தார்.
- அமைச்சுப் பதவிகளில் இருந்து விமல் வீரவன்ஸ, கம்மன்பில ஆகியோரை வெளியேற்றியமைக்கு நீதி கிடைக்கும் வரை அமைச்சின் கடமைகளில் ஈடுபட மாட்டேன் என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.
- ஜனாதிபதியின் கீழ் இருக்கும் எந்தவொரு அமைச்சையும் பெற்றுக் கொள்ள நாம் தயாரில்லையென விமல் வீரவன்ஸ ஆவேசத்துடன் குறிப்பிட்டார்.
- அமைச்சு நடவடிக்கையில் ஈடுபடப் போவதில்லை, அமைச்சரவை கூட்டத்திலும் கலந்து கொள்ளப் போவதில்லை என்று நீர்ப்பாசனத் துறை அமைச்சர் வாசுதேவ தெரிவித்தார்.
- நிதியமைச்சின் செயலாளரைக்கூட கட்டுப்படுத்தாத நிலைமையில் ஜனாதிபதி உள்ளார் என விமல் வீரவன்ஸ குறிப்பிட்டார்.
- நாட்டின் பொருளாதார சீரழிவிற்கு நிதியமைச்சர் பஷில் ராஜபக்ஷவே பொறுப்புக் கூற வேண்டும் என்று விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.
- அமெரிக்காவின் சூழ்ச்சியில் இருந்து மீள்வதற்கான போராட்டத்தை நாம் இனி தொடர்வோம் என்று உதய கம்மன்பில கூளுரைத்தார்.
- எம்மை பதவி நீக்கியமை குறித்து பிரதமர் மனவருத்தமடைந்துள்ளார் எனவும் பிரதமரின் கோரிக்கை நிராகரிக்கப்[illegible] அமைச்சுப் பதவியிலிருந்து நீக்கப்பட்டோம் என விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.
- ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் அரச நிர்வாகத்தில் பலவீனத் தன்மை காணப்படுகிறது என விமல் வீரவன்ஸ குறிப்பிட்டார்.
- அரசாங்கம் குறுகிய காலத்தில் பலவீனமடைவதற்கு நிதியமைச்சர் பஷில் ராஜபக்ஷ பொறுப்புக்கூற வேண்டும் என்று விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.
- அமெரிக்காவினால் நாணய சுத்திகரிப்பு குற்றச்சாட்டில் இருந்து தப்பிக்கவே நிதியமைச்சர் பஷில் ராஜபக்ஷ அமெரிக்காவிடம் இலங்கையை காட்டிக் கொடுக்கிறார் என்றார் விமல் வீரவன்ஸ.
- புதிய அரசியலமைப்பு உருவாக்கம் குறித்து வழங்கிய வாக்குறுதியை ஜனாதிபதி நிறைவேற்றவில்லை என விமல் வீரவன்ஸ குற்றஞ்சாட்டினார்.
- இலங்கையை இந்தோனேசியாவின் கிழக்குத் திமோர் போன்று மாற்றியமைக்கும் ஒப்பந்தத்தை நிதியமைச்சர் பஷில் ராஜபக்ஷ செயற்படுத்துகிறார் என்று உதய கம்மன்பில தெரிவித்தார்.
- அலங்கோல அமெரிக்கரின் பிடியில் ஜனாதிபதி சிக்குண்டுள்ளார் என்று விமல் வீரவன்ஸ ஆணித்தரமாக தெரிவித்தார்.
- நாட்டு மக்கள் வழங்கிய மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை அலங்கோல அமெரிக்கர் இல்லாதொழித்து விட்டார் என்று விமல் வீரவன்ஸ கவலையுடன் குறிப்பிட்டார். (ம)


தன நிதானய
திகதி - 2022.03.04
சீட்டிழுப்பு இலக்கம் - 726
F 11 33 62 67
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 04.03.2022
சீட்டிழுப்பு இலக்கம் 2991
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
P 14 31 50 79
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2022/03/04
சீட்டிழுப்பு இலக்கம் 4696
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
L 6 0 5 2 8 5
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.03.04
சீட்டிழுப்பு இலக்கம் 0037
வெற்றி இலக்கங்கள்
ரிஷபம் 07 41 57 59 ரிஷபம்
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 04/03/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1044
U 16 25 27 58 66

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1673
நிறம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 04.03.2022
தினம் வெள்ளி
G 24 27 55 57
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 50,681,662/-

சனிதா
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.03.04
சீட்டிழுப்பு இல: 3834
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,208,720/-
வெற்றி இலக்கங்கள்
25 59 64 69 J
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 142
சீட்டிழுப்பு திகதி 04.03.2022
வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள்
14 19 27
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,657,220/-

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 7,963,308/-
திகதி 04.03.2022
சீட்டிழுப்பு வாரம் 3385
வர்ணம் நீலம்
வெற்றி இலக்கங்கள் சிம்மம்
08 28 39 44
2 6 7 0 8 6 5
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 11,937,300/-

12 எப்பிட
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
M 24 04 52 65 72
சீட்டிழுப்பு வாரம் 849
வர்ணம் ஊதா
திகதி 2022.03.04 வெள்ளிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 218,536,249/-
தொலை பேசி 011-2 333 546-47
Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1499
சீட்டிழுப்பு திகதி: 2022.03.04
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,963,800/-
வெற்றி இலக்கங்கள்
01 02 39 73 Z
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

கோப்பாய் இராசபாதையில் 3 பரப்பு உறுதிக்காணி 12 அடிப்பாதையுடன் இராசபாதையையும் பருத்தித்துறை வீதியையும் இணைக்கும் வண்ணம் அமைந்துள்ளது. வீடு கட்ட, தோட்டச் செய்கை என்பவற்றிக்கு உகந்த காணி விலை பேசித் தீர்மானிக்கப்படும்.(தயவுசெய்து தரகர்கள் தொடர்புகொள்ள வேண்டாம்.) ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும். காணி பார்ப்பதாயின் தொடர்பிலக்கத்திற்கு தொடர்பு கொண்டு வரவும். (10415)

காணி உரிமையாளர் : 076 096 0473


## பதவி நீக்கம் தொடர்பில் மகிந்தவுக்கு உடன்பாடில்லை

அமைச்சர் உதய கம்மன்பில மற்றும் விமல் வீரவன்ஸ ஆகியோரை அமைச்சுப் பதவிகளில் இருந்து நீக்குவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தில் உடன்பாடு இல்லை என பிரதமர் மகிந்த ராஜபக்ச தெரிவித்ததாக பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ நேற்று தெரிவித்தார்.

அமைச்சுப் பதவிகளில் இருந்து எங்களை நீக்கும் ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தின் தீர்மானத்துடன் தான் உடன்படவில்லை என பிரதமர் மகிந்த ராஜபக்ச தெரிவித்ததாகவும் விமல் வீரவன்ஸ குறிப்பிட்டார். (ம)

## சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்ன் காலமானார்



உலகின் தலைசிறந்த சுழற்பந்து வீச்சாளர்களில் ஒருவரான ஷேன் வோர்ன் காலமானார்.

52 வயதான அவர் தாய்லாந்துக்கு சுற்றுலா சென்றிருந்தபோது திடீர் மாரடைப்பால் உயிரிழந்துள்ளார்.

தாய்லாந்தில் உள்ள ஒரு சொகுசு விடுதியில் தங்கியிருந்தபோது, அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டுள்ள நிலையில் அவருடன் தங்கியிருந்த ஊழியர்கள் ஷேன் வோர்னின் உயிரைக் காப்பாற்றிரமாக முயன்றுள்ளனர்.

எனினும் அது தோல்வியடைந்ததாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

15 ஆண்டுகளாக அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியை பிரதிநிதித்துவப்படுத்திய ஷேன் வோர்ன், 145 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 708 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார்.(ம)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழியில் 42 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் (நிலப்பரப்பு)
- ஏ9 வீதியில் இருந்து 150 m தூரம்
- நாவற்குழி சந்தியில் இருந்து 500 m தூரம்
- யாழ். பஸ் நிலையத்தில் இருந்து 8 கி.மீ தூரம்
- lanka ashok leyland வாகன விற்பனை நிலையத்திற்கு அருகாமை
- 18 அடி பாதையுடன் இயற்கையான சூழல்
- நல்ல தண்ணீர் ஊற்று நிலம்.

(10450)

குரு - 077 623 4204, 077 288 0152
076 658 3621, 077 911 6983

## தரம் 10 & 11 தமிழ் இலக்கிய நயம்

ஆசிரியர்
திரு.A.நவநீதகிருஷ்ணன்
(2021 க.பொ.த (சா/த) மாணவர்களுக்கான துரித மீட்டல், வினாவிடை வகுப்புகளும் நடைபெறுகின்றன)

ENGLISH LITERATURE
BY: P.THARMAKUMARAN
(P.Mathan)
(10473)

NEWTON
NALLUR 077 792 3653

## மணமகன் தேவை

யாழ். இந்து சைவ குடும்பத்தைச் சேர்ந்த 1990 இல் பிறந்த மகம் நட்சத்திரம் 8 இல் செவ்வாய் குற்றமுள்ள உயர்கல்வி படித்த கனடா PR உள்ள மணமகளுக்கு தகுந்த வரனை (சைவ போசனம்) எதிர்பார்க்கின்றனர்.

0097 155 742 0011
0097 156 576 3738
nirna5219@gmail.com
(10463)

## விற்பனைக்கு

நல்ல நிலைமையில் உள்ள சுப்பர் கப் ஹொண்டா 50CC விற்பனைக்கு உண்டு. (10475)

077 942 0568

## ஆங்கில வகுப்பு

ஆண்டு 2 தொடக்கம் G.C.E (O/L), G.C.E (A/L) மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் வீட்டிற்கு வந்து ஆங்கிலம் கற்பிக்கப்படும்.

தொடர்புகளுக்கு
076 119 9298
M.Rajan
(10389)

## LIVE IN CANADA

இலவச கருத்தரங்கு
கனடாவில் வேலைவாய்ப்புகள், நிரந்தர வதிவிடம், உயர்கல்வி வழிமுறைகளும் ஆலோசனைகளும் (C-3894)
06-03-2022 ஞாயிறு காலை - 11 மணி
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
முற்பதிவு அவசியம் 0777-068-777

## பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு

A/L எடுத்தவர்கள் மட்டும் - 6 மாத பயிற்சி



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS (C-3869)

- பயிற்சிக்கால கொடுப்பனவு -15'000/-
- பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
- வேலையின்போது ஆரம்ப சம்பளம் -20'000/-

49A,சப்பல் லேன் யாழ்ப்பாணம். 0777-068-777

## விற்பனைக்கு

சணல் பால் ஆடும் கிடாய்க் குட்டியும் விற்பனைக்கு உண்டு.

விலை - 40,000/= (10486)

077 663 1742

## வீடு வாடகைக்கு

யாழ். கச்சேரியடியில் வீடு வாடகைக்கு கொடுக்கப்படும்.
BED ROOM, HALL, KITCHEN, TOILET (10480)

தொடர்பு
077 142 2846

## ICOF - வளர்பிறை உளவளத்துணை நிலையம்

Register Now!

ஆளுமை மேம்பாடு மற்றும் சம ஆற்றுப்படுத்துனர்களை உருவாக்கும் பயிற்சி நெறி
(Personality Growth & Co- Counsellor's Training Programme)

வளர்பிறை உளவள நிலையத்தின் புலமைவாய்ந்த வளவாளர்களினால் மனித ஆளுமை மேம்பாடு மற்றும் சம ஆற்றுப்படுத்துனர்களை உருவாக்கும் 8 ஆவது பிரிவினருக்கான பயிற்சி நெறி 9.3.2022 அன்று எமது நிறுவனத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளதால் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- பயிற்சிக் காலம் : 100 மணித்தியாலங்கள், வாரநாட்களில் (9.00 - 1.00) வகுப்புக்கள் நடைபெறும்.
- கல்வித் தகைமை : O/L, A/L
- அனுமதிக் கட்டணம் : ரூ1,000.00
- பயிற்சியின் பின்னர் எமது நிறுவனத்தினால் பெறுமதியான கற்கைநெறிச் சான்றிதழ் வழங்கப்படும்.
- விண்ணப்ப முடிவு திகதி : 8.3.2022
- தகுதியானவர்கள் தமது பதிவுகளை எமது அலுவலகத்தில் உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

குறிப்பு:- இச்சான்றிதழ் நேர்முகத் தேர்வுகளின்போது சித்தி அடைவதற்கு உதவிபுரியும்.

வளர்பிறை உளவளத்துணை நிலையம் (ICOF)
இல. 05, பிளச்சஸ் லேன், சுண்டிக்குழி,
யாழ்ப்பாணம். (10467)
077 266 0209
021 222 8238



## சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கான ஆலோசனை சேவைகள் (Business Clinic Services)

வடக்கு மாகாணத்தில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் (SMEs) நாட்டின் மற்றைய மாகாணங்களில் உள்ள தொழில் முயற்சியாளர்கள் போலவே COVID 19 தாக்கம் மற்றும் அண்மைய பொருளாதார நெருக்கடியினாலும் கடுமையான பாதிப்புக்குள்ளாகியிருக்கிறார்கள். இந்த நிலைமையானது வியாபாரங்களின் நீடித்து நிலைத்திருக்கும் தன்மையிலும், தொழிலாளர்களை தொடர்ச்சியாக பேணுவதிலும், ஏற்கனவே கட்டமைக்கப்பட்ட சந்தையினை தொடர்ச்சியாக வைத்திருப்பதிலும் உற்பத்தித் திறனை மேம்படுத்தல் மற்றும் விரிவுபடுத்துவதிலும் தாக்கத்தினை செலுத்தி வருகின்றது.

யாழ்ப்பாணம் வர்த்தகத் தொழிற்துறை மன்றமானது (CCIY) சர்வதேச தொழிலாளர் அமைப்புடன் (ILO) இணைந்து ஆலோசனை சேவைகளினை நடாத்துவதற்குத் தீர்மானித்துள்ளது.

திகதி : 09 - 03 – 2022 (9.00 am to 5.00 pm)
இடம் : GREEN GRASS HOTEL (1st Floor - Sangiliyan Hall)

இதன் மூலம் பாதிக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களின் பிரச்சனைகளுக்கான தீர்வுகளையும், ஆலோசனைகளையும் வங்கிகள், அரச மற்றும் தனியார் வணிக சேவை வழங்குநர்களிடம் இருந்து நேரடியாகப் பெற்றுக்கொடுப்பதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ் மாவட்டத்தில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் இதில் இலவசமாக கலந்து கொள்வதற்கு யாழ்ப்பாணம் வர்த்தகத் தொழிற்துறை மன்றம் (CCIY) ஏற்பாடு செய்துள்ளது. ஆர்வமுள்ளவர்கள் தங்களது பெயர்களை கீழ் குறிப்பிடப்பட்ட தொலைபேசி இலக்கத்துடனோ அல்லது மின்அஞ்சல் மூலமாகவோ தொடர்புகொண்டு எதிர்வரும் மார்ச் மாதம் 7th திகதிக்கு முன்னராக பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

Chamber of Commerce and Industries of Yarlpanam
55, Kachcheri Nallur Road, Jaffna
021 222 6608 | 070 366 3602
jaffnacciy@gmail.com

CCIY — CHAMBER OF COMMERCE AND INDUSTRIES OF YARLPANAM — UNITY IS STRENGTH
(C-3893)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.03.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.